# அனர்த்த முகாமைத்துவ நிலையம்

# ஆண்டறிக்கை
# 2011

## பொருளடக்கம்


பக்கம்

**1. அறிமுகம்** 01 - 05

1.1 தற்போதைய நிலைமை
1.2 அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேசிய சபை
1.3 அ.மு.தே.ச.யின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பின்வருமாறு

**2. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் சுருக்கமான அறிமுகம்** 05 - 18

2.1 எமது நோக்கு
2.2 எமது பணி
2.3 குறிக்கோள்கள்
2.4 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிகள்
2.5 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தாபன ஒழுங்கமைப்பு
2.6 அனர்த்த முகாமைத்துவ நிலைய அலுவலர்களின் தகவல்கள்
2.7 2011 டிசெம்பர் 31இல் உள்ளவாறு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஆளணியினர் விபரம்:
2.8 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஒழுங்கமைப்பை மீள்கட்டமைத்தல்
2.9 பணியாளர் ஆட்சேர்ப்பு
2.10 மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகள் (மா.அ.மு.ஒ.அ)
2.11 அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் புதிய கட்டிடம்
2.12 2011ஆம் ஆண்டு எதிர்நோக்கிய சந்தர்ப்பங்கள் மற்றும் இடையூறுகள் தொடர்பாக பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு 1

**3. தேசிய மட்டத்திலான தலைமை நிகழ்ச்சித்திட்டம்** 18 - 25

3.1 அனர்த்த முகாமைத்துவ சட்டமூலத்தை திருத்துதல
3.2 இலங்கை தேசிய அனர்த்த முகாமைத்துவ கொள்கை
3.3 தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டம்
3.4 தேசிய அவசர நிலைமைகள் கருமமாற்றல் திட்டம் (தே.அ.நி.க.தி)
3.5 தாபனத்திட்டம்
3.6 குழுக்கள

3.6.1 தொழில்நுட்ப ஆலோசனைக் குழு
3.6.2 அவசர பதில் நடவடிக்கைகள் குழு
3.6.3 தேசிய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு குழு (னுஆஊஊ))

3.7 தேசத்துக்கு மகுடம் கண்காட்சி (தயட்ட கிருள)
3.8 தேசிய பாதுகாப்பு தினம் 2011
3.9 அனர்த்த ஆபத்துக்களை களைவதற்கான தேசிய சம்மேளனம்

**4. அனர்த்த ஒழிப்பு மற்றும் ஆய்வு அபிவிருத்திப் பிரிவு** 25 - 32

4.1 பின்புலம்
4.2 அனர்த்தங்களை ஒழிக்கும் திட்டம்

4.2.1 இலங்கையில் அனர்த்தங்களை ஒழிப்பதற்கான கருத்திட்டங்கள்
4.2.2 அம்பாறை, மட்டக்களப்பு, பொலன்னறுவை மற்றும் புத்தளம் மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட வெள்ளப்பெருக்கினை களைவதற்கான கருத்திட்டங்கள்

4.2.3 கண்டி, மாத்தளை, பதுளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் மண்சரிவுகள் மற்றும் மலைகள் சரிந்துவிழல் போன்ற ஆபத்துக்கள் நிறைந்த பிரதேசங்களில் மலைச்சரிவுகளை பலப்படுத்தல் மற்றும் சரிவுகளை குறைத்தல் கருத்திட்டங்கள் 2009இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் இந்த கருத்திட்டம் மூன்று வருடங்களாகும். இந்த கருத்திட்டங்களின் கீழ் தேசிய கட்டிட ஆய்வு நிறுவனம் பின்வரும் பணிகளை மேற்கொள்ள உள்ளது.

4.3 அனர்த்த ஆபத்துக்கள் தொடர்பான கோவையொன்றை தயாரிப்பது தொடர்பான கருத்திட்டம்

4.3.1 கரையோர அனர்த்தங்கள் வரைபட கருத்திட்டம்
4.3.2 மண்சரிவு அனர்த்த வரைப்பட தயாரிப்பு
4.3.3 வறட்சி அனர்த்த வரைபடங்களை தயாரித்தல்
4.3.4 சூறாவளி அனர்த்த வரைபடங்களை தயாரித்தல்
4.3.5 வெள்ளப்பெருக்கு அனர்த்த வரைபடங்களை தயாரித்தல்

4.4 அனர்த்த வரைபடங்களை தயாரிப்பதற்காக செய்மதி தொழில்நுட்பத்தை பயன்படுத்தல்.

**5. முன்ஆயத்த திட்டமிடல் பிரிவு** 32 - 38

5.1 மாவட்டங்கள், பிரதேச செயலாளர் பிரிவுகள்
5.2 அனர்த்தங்களின் போது பதில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மாவட்ட அடிப்படையிலான அனர்த்தங்களுக்கான முன்ஆயத்தங்களை திட்டமிடல

5.2.1 பிரதேச செயலாளர் பிரிவுகள் அடிப்படையில் முன்ஆயத்தம் மற்றும் அவசர நிலைமைகள் பதில் நடவடிக்கைகளுக்கான திட்டங்கள்
5.2.2 கிராம உத்தியோகத்தர் பிரிவு அடிப்படையில் முன் ஆயத்த நடவடிக்கைகள்
5.2.3 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் அடிப்படையில் ஒத்திகைகள
5.2.4 பாரியளவிலான நீர்த்தேக்க அணைக்கட்டுக்கள் தொடர்பான அனர்த்த முன் ஆயத்த நடவடிக்கைகள்
5.2.5 பாடசாலைகளுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களும் சுனாமி அனர்த்தங்களின் போது பாடசாலை மாணவர்களை பாதுகாப்பான இடத்துக்கு அழைத்து செல்லல் தொடர்பான ஒத்தகை நிகழ்ச்சித்திட்டம்

5.3 அனர்த்தங்கள் ஏற்பட வாய்ப்புள்ள பகுதிகளில் அனர்த்த முன்னெச்சரிக்கை சாத்தியத்தை மேம்படுத்தல் ∴ உபகரணங்களை கொள்வனவு செய்தல்.

**6. <u>அறிவூட்டல் பிரிவு</u>** 38 - 43

6.1 சர்வதேச, சம்மேளனங்களின் கருத்தரங்கும் செயலமர்வுகளும்

6.1.1 அனர்த்தங்களை தணித்தல் தொடர்பான ஆசிய சம்மேளன கருத்தரங்கு
6.1.2 சம்பவ கட்டளை அமைப்பு தொடர்பான பிராந்திய பயிற்சி செயலமர்வு
6.1.3 இலங்கைக்குள் நகர பலப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்தல்.

6.2 தேசிய மட்டத்திலான பயிற்சித்திட்டங்கள்

6.2.1 அனர்த்த முகாமைத்துவ நிலைய பதவியணியினரின் திறன்களை வளர்த்தல்
6.2.2 பங்காளி நிறுவனங்களின் சாத்தியத் தன்மையை மேம்படுத்தல்
6.2.3 மாவட்ட அடிப்படையிலான பயிற்சி மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்

**7. அவசர நிலைமை கருமமாற்றல் பிரிவு 43 - 53**

7.1 அறிமுகம்
7.2 அவசர நிலைமைகள் கருமமாற்றல் பிரிவு
7.3 அவசர நிலைமைகளின்போது கருமமாற்றல் நடவடிக்கைகளுக்காக வளங்களை வழங்குதல்
7.4 அவசர நிலைமைகளின் போதான பதில் நடவடிக்கைகள்

7.4.1 வெள்ளப்பெருக்கு
7.4.2 மண்சரிவுகள்
7.4.3 நகர்ப்புறங்களிலும் காடுகளிலும் ஏற்படும் தீ
7.4.4 கடும் காற்று நிலைமை

7.5 அனர்த்தங்கள் தொடர்பாக முன்னெச்சரிக்கை தகவல் பரிமாற்றல் மற்றும் தொடர்பாடல்
7.6 அனர்த்தங்களின்போது மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்வதற்கான ஒத்திகைகள்
7.7 பாதுகாப்பான இடங்களுக்கு மக்களை அழைத்துச் செல்வதற்காகவும் மீட்பு பணிகளுக்காகவும் இராணுவத்தினரின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ளல்
7.8 அனர்த்த தகவல் தரவுகள் (டெஸ்இன்வென்டர்)
7.9 இலங்கை அனர்த்த வள கட்டமைப்பு (ளுடுனுசுே)
7.10 இணையத்தளம்

**8. இறுதிக் கணக்குகள் 2010 - அனர்த்த முகாமைத்துவ நிலையம் 55 - 79**

**9. கணக்காய்வு அறிக்கை 80 - 93**

**10. கணக்காய்வு அறிக்கை பற்றிய அவதானங்கள் 94 - 102**

# அனர்த்த முகாமைத்துவ நிலையம்

## வருடாந்த அறிக்கை 2011

### 1. அறிமுகம்

இலங்கையில் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான பிரதான நிறுவனம் அனர்த்த முகாமைத்துவ நிலையமாகும் (அ.மு.நி). குறிப்பிட்ட சகல பங்காளிகளையும் இணைத்துக்கொண்டு இடர் ஆபத்துக்களை குறைத்துக் கொள்வதற்காக தேசிய மற்றும் உபதேசிய மட்டத்தில் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் ஆகிய தொடர்பு அதற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2005ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டமூலத்தின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கை இடர் தேசிய சபையின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தல் எனும் நோக்குடன் தேசிய அனர்த்த முகாமைத்துவ பேரவை (தே.அ.மு.பே) நிறுவப்பட்டது. தேசிய கொள்கை வகுத்தல் மற்றும் மூலோபாய பணிப்புரை வழங்குவதற்கான ஆணை தேசிய சபைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் செயற்பாடுகளை நிர்வாகம் செய்வதும் வழிகாட்டுவதும் அனர்த்த முகாமைத்தவ அமைச்சின் பணியாகவுள்ளது.

பதிலிறுப்புசார் பொறிமுறையொன்றிலிருந்து விலகி செயற்பாட்டிற்கு ஆதரவான ஓர் அணுகுமுறை தொடர்பான கொள்கை மாற்றத்திற்கு இட்டுச் சென்ற ஒட்டுமொத்த அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான அனர்த்த அபாயக்குறைப்பு முன்னெடுப்புக்களை மேற்கொள்ளும் ஓர் வேலைச்சட்டகமாக 2005ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க சட்டம் உருவாகியுள்ளது. இச்சட்டத்தின் ஆளுகைக்குள் இருபத்தொரு (21) அபாயங்கள் வந்துள்ளன.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் (அ.மு.நி.) தலைமை பணியாக விளங்குவது யாதெனில் இடர்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைத்தல் அதற்கு தயார்படுத்தல், ஆபத்துக்கு முகங்கொடுக்கக்கூடிய சமூகத்தினருக்கு அதனை முன்கூட்டியே அறிவித்தல். அவசர சந்தர்ப்பங்களில் சிகிச்சையளித்தல், நிவாரண உதவி சேவைகள் என்பவற்றை ஒருங்கிணைத்தல் மற்றும் ஏனைய பிரதான நிறுவனங்களுடன் இணைந்து இடர்கள் முடிந்தவுடன் செயற்பாடுகளில் பங்குகொள்ளுதல் என்பனவாகும். இடர் ஆபத்துக்களை குறைக்கும் நோக்குடன் அனைத்து மாவட்டங்களையும்

உள்ளடக்கியவாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு நிலையங்கள் மாவட்ட மட்டத்தில் நிறுவப்பட்டுள்ளன.

## 1.1 தற்போதைய நிலைமை

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் இயங்கிவரும் அனர்த்த முகாமைத்துவ நிலையமானது ஆறரை (6½) வருடங்களின் பின்னர் அனர்த்தம் தொடர்பான சகல செயற்பாடுகளிலும் பிரதான வகிபாத்திரத்தை வகிக்கக்கூடிய ஓர் தேசிய நிலையமாக உருவாகிவருகின்றது. அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளை ஒருங்கிணைக்கவும் அவற்றிற்கு அனுசரணை வழங்கவும் மற்றும் நிறைவேற்றவும் மாவட்ட, பிரதேச செயலக, பிரதேச சபை மற்றும் கிராம சேவை பிரிவுகளில் நாடு தழுவிய அளவில் அனர்த்த முகாமைத்துவக் குழுக்கள் தாபிக்கப்பட்டன. 2011ஆம் ஆண்டு வடக்கு மாகாணத்தில் இக்குழுக்களை தாபிப்பதில் விசேட அக்கறை காண்பிக்கப்பட்டது.

வெள்ளம், மண்சரிவு, சூறாவளி, சுனாமி மற்றும் ஏனைய ஆபத்துக்கள் ஏற்படக்கூடிய பிரதேசங்களில் அனர்த்த முன் ஆயத்த செயற்பாடுகளையும் அவசர பதிலிறுப்பு செயற்பாடுகளையும் ஸ்திரப்படுத்தல் தொடர்பாக கிராம சேவகர் மட்டத்தில் பல சமூகமட்ட தன்னார்வ குழுக்கள் 2006 ஆண்டிலிருந்து தாபிக்கப்பட்டன. மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகள், சம்பந்தப்பட்ட அரச மற்றும் அரச சாரா முகவர்களின் ஒத்துழைப்புடன் அனைத்து பிராந்திய மட்ட செயற்பாடுகளை முன்னெடுக்கின்றன. மாவட்ட, பிரதேச மற்றும் கிராம சேவையாளர் மட்டங்களில் தாபிக்கப்பட்டுள்ள அனர்த்த முகாமைத்துவ குழுக்கள் நிகழ்ச்சித்திட்டத்தை கண்காணிக்கவும் நிறைவேற்றவும் உதவிபுரிகின்றன.

## 1.2 அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேசிய சபை

2005ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க இடர் முகாமைத்துவ சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய சபையினால் 2005 ஜூலை மாதத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இந்த தேசிய சபையின் தவிசாளராக மேண்மை தங்கிய சனாதிபதி செயற்படுவதுடன் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான முக்கிய நிறுவனமும் இதுவாகும்,

**தேசிய சபையின் கட்டமைப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:**




**1.3 அ.மு.தே.ச.யின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பின்வருமாறு:**

| | |
|---|---|
| தலைவர் | அதிமேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ |
| உபதலைவர் | கௌரவ பிரதம மந்திரி டி.எம். ஜயரத்ன |
| எதிர்க்கட்சித் தலைவர் | கௌரவ ரனில் விக்கிரமசிங்க |

**பின்வரும் விடயங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர்கள்:**

| | |
|---|---|
| பாதுகாப்பு | அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ |
| பொலிஸ் | அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ |
| நிதி, திட்டமிடல் | அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ |
| நெடுஞ்சாலைகள் | அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ |
| கடற்கரைப் பாதுகாப்பு | அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ |
| நகர அபிவிருத்தி | அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ |
| அனர்த்த முகாமைத்துவம் | கௌரவ மஹிந்த அமரவீர |
| சமூக சேவைகள் | கௌரவ பீலிக்ஸ் பெரேரா |
| சுற்றாடல் | கௌரவ அநுர பிரியதர்சன யாப்பா |

| | |
|---|---|
| பொது நிர்வாகம்,உள்நாட்டலுவல்கள் | கௌரவ டப்ளியு.டி.ஜே. செனவிரத்ன |
| சுகாதாரம் | கௌரவ மைத்திரிபால சிறிசேன |
| தொழில்நுட்பமும் ஆராய்ச்சியும் | கௌரவ (திருமதி) பவித்ரா வன்னிஆரச்சி |
| நிர்மாணம், பொறியியல் சேவைகள் | |
| வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் | கௌரவ விமல் வீரவன்ச |
| நீர்ப்பாசனம், நீர்வள முகாமைத்துவம் | கௌரவ நிமல் ஸ்ரீபால |
| மின்வலு எரிசக்தி | கௌரவ சம்பிக ரனவக்க |
| காணி காணி அபிவிருத்தி | கௌரவ ஜானக பண்டார தென்னகோன் |
| கடற்றொழில் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி | |
| | கௌரவ ராஜித சேனாரத்ன |
| வெளிநாட்டு அலுவல்கள் | கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ் |
| நீர் விநியோகம், கால்வாய் | கௌரவ தினேஷ் குணவர்தன |
| கல்வி | கௌரவ பந்துல குணவர்தன |
| மீள்டியேற்றம் | கௌரவ குணரத்ன வீரகோன் |
| பொருளாதார அபிவிருத்தி | கௌரவ பசில் ராஜபக்ஷ |
| கைத்தொழில் வர்த்தகம் | கௌரவ அப்துல் ரிஷாட் பதியுதீன் |
| புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் | |
| மறுசீரமைப்பு | கௌரவ சந்தரசிறி கஜதீர |
| விவசாயம் | கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன |

அதிமேதகு ஜனாதிபதியின் தலைமையில் அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேசிய சபை விசேடமாக மண்சரிவு மற்றும் வெள்ளம் தொடர்பான அனர்த்த அபாய தணிப்பு செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக 2011ஆம் ஆண்டு பின்வரும் நாட்களில் கூடியது. இக்கூட்டத்தில் அனர்த்த ஆபத்துக்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

- 2011 மே மாதம் 02ஆந் திகதி
- 2011 ஆகஸ்ட் 02ஆந் திகதி
- 2011 நவம்பர் 25ஆந் திகதி

2005ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பின்வரும் அனர்த்தங்கள் அனர்த்த முகாமைத்துவத்தின் கண்காணிப்பில் வருகின்றன.

1. மண்சரிவு
2. சூறாவளி
3. வெள்ளம்
4. வரட்சி

5. கைத்தொழில் ஆபத்துக்கள்
6. சுனாமி (அலைகள்)
7. பூமியதிர்ச்சி
8. வளிமண்டல ஆபத்துக்கள்
9. கரையோர ஆபத்துக்கள்
10. தீ
11. தொற்று நோய்கள்
12. வெடிப்புகள்
13. விமான தாக்குதல்கள்
14. சிவில் அல்லது உள்ளக வன்முறைகள்
15. இரசாயன விபத்துக்கள்
16. கதிர்வீச்சினால் ஏற்படும் விபத்துக்கள்
17. உள்நாட்டு அல்லது கப்பல் எண்ணெய் ஒழுக்குகள்
18. அணு ஆபத்துக்கள்
19. நகர மற்றும் காட்டுத்தீ
20. கடற்கரை மண்ணரிப்பு
21. புயல், இடி மின்னலுடன் கூடிய புயல்

## 2. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் சுருக்கமான அறிமுகம்

அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஓர் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையிலும் ஐந்து பணிப்பாளர்களின் கீழ்வரும் ஐந்து பிரிவுகளையும் உள்ளடக்கி தாபிக்கப்பட்டது. இவ் ஐந்து பிரிவுகளாவன, தணிப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, அவசர நடவடிக்கை மற்றும் முன்னெச்சரிக்கை விடுத்தல், முன் ஆயத்த திட்டமிடல், பயிற்சி மற்றும் விழிப்புணர்வு, நிர்வாகம் மற்றும் நிதி என்பனவாகும். மாவட்ட அனர்த்த ஒருங்கிணைப்பு அலகுகள் மாவட்ட மட்டங்களில் காணப்படுகின்றன (மா.அ.ஒ.அ) உதவிப் பணிப்பாளர்கள் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்களின் உதவியுடன் மா.அ.ஒ.அ.களுக்கு பொறுப்பாகவுள்ளனர்.

### 2.1 எமது நோக்கு

*பாதுகாப்பான சமூகமொன்றை கட்டியெழுப்புவதன் மூலம் நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்தல்*

## 2.2 எமது பணி

இயற்கையான தொழில்நுட்ப மற்றும் மனிதர்களால் ஏற்படுத்தப்படும் அனர்த்த ஆபத்துக்களை முகாமைத்துவம் செய்தல் மூலம் சமூகத்திற்குள்ளும் தேசத்திற்குள்ளும் பாதுகாப்பு தொடர்பான எண்ணக்கருவை ஏற்படுத்தல்.

## 2.3 குறிக்கோள்கள்

அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள், மாவட்ட, பிரதேச மற்றும் கிராம சேவையாளர் மட்ட நிர்வாகம் போன்ற நாடளாவிய நிர்வாக கட்டமைப்புக்களை ஒருங்கிணைத்து பின்வரும் விடயங்கள் தொடர்பான செயற்பாடுகளை கண்காணித்து நிறைவேற்றல்:

- அபாய படவரைபும் மற்றும் ஆபத்து மதிப்பீடும்
- விழிப்புணர்வு மற்றும் பயிற்சி
- அனர்த்த தணிப்பு
- முன் எச்சரிக்கை மற்றும் தகவல் விடுத்தல்
- அனர்த்தங்களின்போது அவற்றுக்கு பதிலிறுப்பு நடவடிக்கைகள் முன் ஆயத்தம்
- அவசர நடவடிக்கைகள் முகாமைத்தவம்
- அனர்த்தங்களுக்கு பின்னரான செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்

## 2.4 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிகள்

சமீபத்திய அரச வர்த்தமாணிக்கமைய அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிகள்:

1. இயற்கையான மற்றும் மனிதர்களால் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்கள் தொடர்பான நிவாரண நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து முகாமைத்துவம் செய்தல்

2. அனர்த்த தணிப்பு, பதிலிறுப்பு மற்றும் மீண்டெழுதல் தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சி நிரல்கள் மற்றும் கருத்திட்டங்களை உருவாக்குதல்.

3. சம்பந்தப்பட்ட குறிக்கோள்களை அடையும் வகையில் ஒதுக்கப்பட்ட வளங்களுக்குள் மற்றும் தேசிய திட்டமிடல் அதிகார சபைகளுடன் உடன்பட்ட காலவறையறைக்குள் அவ்வாறான கொள்கைகள், நிகழ்ச்சி நிரல்கள் மற்றும் கருத்திட்டங்களை நிறைவேற்றல் தொடர்பான பணிப்புரை.

4. தேசிய கொள்கையின் அடிப்படையில் தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் மற்றும் தேசிய அவசர செயற்பாட்டுத் திட்டம் ஆகியவற்றை வகுத்தல்.

5. அனர்த்த தணிப்பு பதிலிறுப்பு மற்றும் மீண்டெழுதல் தொடர்பாக வெளிநாட்டு உதவியுடனான கருத்திட்டங்களை முன்னெடுத்து ஒருங்கிணைத்தல்.

6. பொறுப்புக்களை உரிய காலத்திற்குள் நிறைவேற்றிக்கொள்ளும் முகமாக அமைச்சுக்கள், அரச அதிகாரசபைகள், முகவர்கள், தனியார் துறை முகவர்கள், அரசுசார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட முகவர்களுடன் பேரம் பேசுதல்.

7. இயற்கையான மற்றும் மனிதர்களால் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்கள் தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைப்பு செய்தல்.

8. இயற்கையான மற்றும் மனிதர்களால் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்களின்போது காப்பாற்றும் நடவடிக்கைகளை நிறைவேற்றல்.

9. முன் எச்சரிக்கை முறைமைகள்

10. வீடமைப்பு மற்றும் கட்டிட நிர்மாண தொழில்நுட்ப துறைகளில் ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்

## *2.5* அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தாபன ஒழுங்கமைப்பு



## 2.6 அனர்த்த முகாமைத்துவ நிலைய அலுவலர்களின் தகவல்கள்

அனர்த்த ஆபத்து தணிப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, அவசர நடவடிக்கை மற்றும் முன் எச்சரிக்கை தகவல் விடுத்தல், பயிற்சி மற்றும் விழிப்புணர்வு, தயார்நிலைத் திட்டமிடல், மனிதவளம், நிதி போன்ற முக்கிய நடவடிக்கை பிரிவுகளை பரிசீலனைக்கு எடுத்து ஆளணி நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | |
|---|---|
| பணிப்பாளர் நாயகம் | மேஜர் ஜெனரல் காமினி ஹெட்டிஆரச்சி (இளைப்பாறிய)<br>ஆங்கிலம், பொதுநிர்வாகம் என்பவற்றில் முதுமாணிப் பட்டம் (சப்ரகமுவ)<br>மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா (NIBM) |
| பணிப்பாளர் (தணிப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) | திரு. U. W. L. சந்தரதாஸ (Relinquished appointment from 08.08.2011)<br>MSc. Civil Engineering<br>Dip. in Water Supply and Waste Water Treatment, Middlesex Polytechnic (UK) |
| பணிப்பாளர் (அவசர நடவடிக்கை மற்றும் முன்னெச்சரிக்கை விடுப்பு) | Brig. N. B. Weragama (Retd.) (Relinquished appointment from 08.08.2011)<br>BSc. in Science (University of Peradeniya)<br>MSc (Def) in Management (KDA) |
| பணிப்பாளர் (தயார்நிலை திட்டமிடல்)<br><br>பணிப்பாளர் (பயிற்சி, பொது நிர்வாகம்) | திரு. ஜெ.எம். சுனில் ஜயவீர (19.12.11 முதல் நியமிக்கப்பட்டுள்ளார்)<br>சொத்து முகாமைத்துவம், மதிப்பிடல் பி.எஸ்.சி.<br>நகர கிராமிய திட்டமிடல் எம்.எஸ்.சி.<br>பிரயோக சமூகவியல், பட்டப்பின் டிப்ளோமா<br>நகர திட்டமிடல் எம்.பீ.ஏ.எஸ்.எல், ஐ.டி.பீ.எஸ்.எல்<br>திரு. டி.எம். சுகதாஸ (01.09.11 முதல் நியமிக்கப்பட்டுள்ளார்)<br>சமூகவியல், குற்றவியல், எம்.ஏ. விசேடம் சர்வதேச விவகாரம், பட்டப்பின் டிப்ளோமா குற்றவியல் எம்.ஏ. சமூகவியல், எம்.எஸ்.சீ.<br>திரு. K. P. A. தர்மரத்ன (Relinquished from 05.05.2011)<br>BCom. (SP) பேராதனை. சமுதாய அபிவிருத்தியில் PGD (கொழும்பு பல்கலைக்கழகம்) |

| | |
|---|---|
| பிரதிப் பணிப்பாளர் (ஊடகம்) | திரு. டப்ளியு.ஏ. சரத் லால் குமார<br>ஊடக டிப்ளோமா |
| உதவிப்பணிப்பாளர் (நிதி) | திரு. பி.ஜி. மஞ்சுல சமந்த ரனசிங்க (03.10.11 இலிருந்து நியமனம்)<br>B.Com (விசேட) LICA, CIMA – Inter MAAT |
| உதவிப்பணிப்பாளர் (தணிப்பு)<br><br>உதவிப்பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) | செல்வி/திருமதி அநோஜா செனவிரத்ன (மேற்பார்வை – தணிப்பு பணிப்பாளர்)<br>புவிச்சரிதவியல் Bsc. (விசேடம்), சிவில் பொறியியல் (பகுதி I மற்றும் II), Msc (நீர் வளங்கள் சுற்றாடல் முகாமைத்துவம்)<br>நெதர்லாந்து, மனிதவள முகாமைத்துவத்தில் PGD, வெளிவிவகாரத் தொடர்பில் டிப்ளோமா<br>திரு. சிறிமல் சமன்சிறி<br>BSc., PGD (RS/GIS) அவுஸ்திரேலிய கம்பியுட்டர் சமூக உறுப்பினர் |
| (உதவிப்பணிப்பாளர் (பயிற்சி மற்றும் விழிப்புணர்வு) | திரு. பாலித பண்டார<br>BSc., விவசாய பொறியியலில் M.Phill |
| உதவிப்பணிப்பாளர் (முன் எச்சரிக்கை) | திரு. பிரதீப் கொடிப்பிலி<br>BSc. விவசாயம் (கௌரவ) விசேட |
| உதவிப்பணிப்பாளர் (முன் எச்சரிக்கை) | திரு. ரவி ஜயரத்ன<br>(அவசர நடவடிக்கைகளின் போது மேற்பார்வை கடமைகள்) BSc., MSc. விவசாயம் |
| உதவிப்பணிப்பாளர் (அவசர நடவடிக்கை) | மேஜர். W. J. M. நவரத்ன (இளைப்பாறிய)<br>BA, PGD குற்றவியல், ஆங்கிலத்தில் டிப்ளோமா |
| உதவிப்பணிப்பாளர் (அவசர நடவடிக்கை)<br><br>அவசர நடவடிக்கை (அவசர நடவடிக்கை நிலையம்)<br><br>அவசர நடவடிக்கை (தயார்நிலை திட்டமிடல்) | திரு. H. I. திலகரத்ன<br>BSc., MSc. விவசாயம்<br>திரு. T. W. K. இந்திக புஸ்பகுமார (01.12.11 திகதியிலிருந்து நியமனம்)<br>BSc. விவசாயம் (கௌரவ) விசேட<br>MSc. In NRM<br>திரு. சதுர லியனாரச்சி (01.11.11 லிருந்து நியமனம்)<br>BSc. (பேராதனை பல்கலைக்கழகம்) |

| | |
|---|---|
| அவசர நடவடிக்கை (தயார்நிலை திட்டமிடல்) | திரு. N. P. மாதவனராச்சி (19.10.11லிருந்து நியமனம)<br>MSc. அனர்த்த முகாமைத்துவம்<br>BSc. விவசாயம் (விசேட)<br>கணினியில் டிப்ளோமா |
| அவசர நடவடிக்கை (மனித வளம்) | திரு. A. R. M. P. ரத்நாயக்க (19.09.11 லிருந்து நியமனம்)<br>Bcom. (விசேட) கொழும்பு பல்கலைக்கழக பட்டம்<br>Licentiate I of the ICA of Sri Lanka |
| இணைப்பு (அவசர நடவடிக்கைகள்) | லெப். கேனல். K. I. S. N. பெரேரா – இராணுவ ஒருங்கிணைப்பாளர் (18.11.11 லிருந்து நியமனம்)<br>Post Graduate Diploma in Management |
| நிர்வாக உத்தியோகத்தர்கள் | Mr. V.S. Hettiarachchi (Relinquished from 08.08.11)<br>திரு. S. N. ஹேவகே (18.10.11 லிருந்து நியமனம்)<br>M.Phill (களனி பல்கலைக்கழகம்)<br>B.A.(விசேட) (பௌத்தம் மற்றும் பாலி பல்கலைக்கழகம்)<br>B.A. (விசேட) (களனி பல்கலைக்கழகம்) |

**2.7 .** 2011 டிசெம்பர் 31இல் உள்ளவாறு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஆளணியினர் விபரம்*:*

| பதவி | அனுமதிக்கப்பட்ட ஆளணி | தற்போதுள்ள | வெற்றிடம் |
|---|---|---|---|
| பணிப்பாளர் நாயகம் | 1 | 1 | 0 |
| பணிப்பாளர் நாயகம் (மேலதிக) | 1 | 0 | 1 |
| பணிப்பாளர்கள் | 5 | 2 | 3 |
| உள்ளக கணக்காய்வாளர் | 1 | 1 | 0 |
| பிரதிப் பணிப்பாளர்கள் | 7 | 0 | 7 |
| உதவிப்பணிப்பாளர் (ஊடகம்) | 1 | 1 | 0 |
| உதவிப்பணிப்பாளர் (மனித வளம்) | 1 | 1 | 0 |
| உதவிப்பணிப்பாளர் (நிதி) | 1 | 1 | 0 |
| உதவிப்பணிப்பாளர்கள் | 12 | 10 | 2 |
| உதவிப்பணிப்பாளர் (மாவட்ட) | 25 | 17 | 8 |
| நிதி உத்தியோகத்தர் | 1 | 1 | 0 |
| நிர்வாக உத்தியோகத்தர் | 1 | 1 | 0 |
| நூலகர் | 1 | 1 | 0 |
| அபிவிருத்தி உதவியாளர் | 1 | 0 | 1 |
| மொழிபெயர்ப்பாளர் | 1 | 0 | 1 |
| தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 2 | 2 | 0 |
| பிரத்தியேக உதவியாளர் | 1 | 0 | 1 |
| வீடியோ மற்றும் கமரா தொழில் நுட்பவியலாளர் | 1 | 0 | 1 |
| தொடர்பாடல் தொழில் நுட்பவியலாளர் | 3 | 0 | 3 |
| வானொலி இயக்குனர் | 1 | 0 | 1 |
| முகாமைத்துவ உதவியாளர் | 25 | 12 | 13 |
| மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர் | 100 | 70 | 30 |
| சாரதி (01 அமைச்சால் நியமிக்கப்பட்டவர்) | 30 | 27 | 3 |
| KKS | 5 | 5 | 0 |
| **மொத்தம்** | **228** | **153** | **75** |

## 2.8 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஒழுங்கமைப்பை மீள்கட்டமைத்தல்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நடவடிக்கைகளின் விஸ்தரிப்பு மற்றும் ஸ்திரப்படுத்தல் காரணமாக அதன் மீள்கட்டமைப்பு அவசியமாகின்றது. நிரந்தர அடிப்படையில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யும் முகமாக சம்பளம் மற்றும் ஆளணி துணைக்குழுவிடம் பலமுறை மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகளின் பின்னர் 2011.05.20ஆம் திகதி அதற்கான அனுமதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டது. இதன்படி 57 நபர்களுக்கு நிரந்தர நியமனங்களும் 74 நபர்களுக்கு அவசியமான தகைமைகளை ஐந்து வருடங்களுக்குள் பூர்த்தி செய்ய வேண்டும் என்றும் நிபந்தனையிலும் ஒப்பந்த அடிப்படையில் நியமனங்களும் வழங்கப்பட்டன.

## 2.9 பணியாளர் ஆட்சேர்ப்பு

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட புதிய SOR இற்கமைய ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது. தலைமை அலுவலகம் மற்றும் மாவட்டங்களில் 70%ற்கு மேற்பட்ட வெற்றிடங்கள் நிரப்பப்பட்டன.

தற்போது தலைமை அலுவலகத்திற்கும் மாவட்டங்களுக்கும் முகாமைத்துவ உதவியாளர்கள் ஆட்சேர்ப்பு நடைபெறுகின்றது. 2012 யூலை மாதத்தில் இந்த ஆட்சேர்ப்பு பணி பூரணப்படுத்தப்படும்.

## 2.10 மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகள் (மா.அ.மு.ஒ.அ)

இவ்வமைப்பு (மா.அ.மு.ஒ.அ.) உதவிப்பணிப்பாளர் (மாவட்டம்) ஒருவரையும் உதவி ஒருங்கிணைப்பாளர்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. உதவி ஒருங்கிணைப்பாளர்களின் எண்ணிக்கை மாவட்டங்கள் அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய சாத்தியக்கூற்றின் அடிப்படையில் மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசப்படுகின்றது.

25 மாவட்டங்களிலும் இயங்கும் மா.அ.மு.ஒ.அலகுகளில் மொத்தமாக 25 உதவிப் பணிப்பாளர்களும் (மாவட்ட) 82 உதவி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பாளர்களும் காணப்படுகின்றனர்.

கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, புத்தளம் மற்றும் இரத்தினபுரி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகளில் 97 இராணுவ மற்றும் விமானப்படை உறுப்பினர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். களுத்துறை மற்றும் கேகாலையை தவிர ஏனைய மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகுகளில் பிரதேச செயலகங்களிலேயே தாபிக்கப்பட்டுள்ளன.

**மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பொறிமுறை**




## 2.11 அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் புதிய கட்டிடம்

அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் தேசிய அனர்த்த சேவைகள் நிலையம் என்பனவற்றை ஒரே இடத்தில் இயங்கவைக்க கூடிய வகையில் அதற்கான கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இதன் பணிகள் 2012 மார்ச் மாதம் ஆகும் போது பூர்த்தி செய்யப்படும்.

தற்போதைய வளவில் காணப்படும் இடவசதிகள் மற்றும் வசதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதனால் பதவியணியினர் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள். 2012 மார்ச் மாதம் புதிய கட்டிடத்துக்கு செல்வதன் மூலம் இந்த பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும்.

## 2.12 2011ஆம் ஆண்டு எதிர்நோக்கிய சந்தர்ப்பங்கள் மற்றும் இடையூறுகள் தொடர்பாக பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

1. 2011 ஜனவரி மாதம் மற்றும் பெப்ரவரி மாதம் வடக்கு கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் பாரியளவிலான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. அதேபோன்று அக்காலகட்டத்தில் மலைநாட்டு பகுதிகளில் மண்சரிவுகள் ஏற்பட்டன. 2011 ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் பெப்ரவரி மாதத்தில் மழை காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மில்லியன் 1.1 மற்றும் மில்லியன் 1.2 ஆகும். இந்தக் காலகட்டத்தில் மட்டக்களப்பு, அம்பாறை, பொலன்னறுவை மாவட்டங்களில் கிடைத்த முழுமையான மழைவீழ்ச்சி சராசரி மழைவீழ்ச்சியினையும் விட அதிகமாகும்.

   காலநிலை மாற்றங்கள் காரணமாக இவ்வாறான வழமைக்கு மாறான காலநிலை நிலைமைகள் எதிர்காலத்தில் ஏற்படலாம். விவசாய நடவடிக்கைகளுக்காக நிர்மாணிக்கப்பட்ட நடுத்தர மற்றும் பாரிய அளவிலான பல நீர்த்தேக்கங்கள் காணப்படுவதுடன் வெள்ளப்பெருக்கு நீரினை களஞ்சியப்படுத்த இந்த நீர்த்தேக்கங்கள் பெரிதும் உதவுகின்றன. எனினும் இந்த நீர்த்தேக்கங்கள் போதுமானளவில் பராமரிக்கப்படாமையினால் இந்த நீர்த்தேக்கங்களில் உச்ச அளவில் நீரை சேகரிக்க முடியாதுள்ளது. இதனால் வடக்கு கிழக்கு, வடமத்திய மாகாணங்களில் வெள்ளப்பெருக்கினால் ஏற்படும் பாதிப்புக்களை குறைப்பதற்காக நீர்த்தேக்கங்களின் நிலைமைகளை பரிசீலித்தல் அவதானிப்பு கட்டமைப்பொன்றை ஏற்படுத்தல் புதிய நீர்த்தேக்கங்களை உருவாக்குதல் ஆற்றுக்களுக்கான புகுவழிகளை மேம்படுத்தல் கால்வாய்களை புனரமைத்தல் என்பன சிறந்த செயற்திட்டங்களாகும். நீர்த்தேக்கங்களின் துவாரங்களை உரிய நேரத்தில் கட்டுப்படுத்தக்கூடிய வகையில் நீர்த்தேக்கங்களுக்கு கிடைக்கும் நீரின் அளவு தொடர்பான எதிர்கூவல்கள் தேவைப்படுகின்றன. மழைவீழ்ச்சி மற்றும் நீர் மட்டம் என்பவற்றை அளவிடுவதன் மூலம் உரிய நேரத்தில் தரவுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் இதன்மூலம் நீர்த்தேக்கத்தில் நிரம்பக்கூடிய நீரின் அளவு தொடர்பாக முன்னறிவித்தல்களை விடுக்க முடியும் என்பதுடன் இதன் மூலம்

நீர்த்தேக்கங்கள் நிரம்பி வழிவதனால் ஏற்படக்கூடிய வெள்ளப்பெருக்கின் ஆபத்துக்களையும் குறைத்துக் கொள்ளலாம்.

2. அனர்த்தங்களை தணிப்பதற்கான நடவடிக்கைகள் எங்களால் எடுக்கப்பட்ட போதிலும் தற்போதிருக்கும் நிலைமையின் காரணமாக அனர்த்தங்கள் ஏற்படுவதை தவிர்க்க முடியாது. இதனால் அவசர சந்தர்ப்பங்களிலான பதில் நடவடிக்கைகளை அனைத்து சந்தர்ப்பங்களிலும் பலப்படுத்த வேண்டும். இதனால் அவசர நிலைமைகளின் போதான பதில் நடவடிக்கைகளை அனைத்து மட்டங்களிலும் பலப்படுத்த வேண்டும்.

அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் நடைபெற்ற அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய சபைக் கூட்டத்தின் போது அனைத்து மாவட்டங்களிலும் தேடுதல் மற்றும் மீட்பு பணிகளில் இராணுவத்தினரை ஈடுபடுத்த வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. இது அனைத்து மாவட்டங்களிலும் அனர்த்த பதில் நடவடிக்கைகளை மேம்படுத்துவதாக அமையும்.

3. விசேடமாக பயிற்சியளித்தல், மக்களுக்கு அறிவூட்டல், முன் ஆயத்தம், திட்டங்களை தயாரிப்பதற்கான பிரிவுகளின் பணிப்பாளர்கள் மற்றும் சில துறைகளின் உதவிப் பணிப்பாளர்கள் உட்பட தலைமை அலுவலகத்தால் சிரேஷ்ட பதவியணியினரின் பற்றாக்குறை காரணமாக அனர்த்த முகாமைத்துவப் பணிகளை செவ்வனே மேற்கொள்ள இடையூறுகள் ஏற்படலாம். இந்த பதவிகளின் வெற்றிடங்கள் கடந்த மூன்று மாதங்களுக்குள்ளேயே நிரப்பப்பட்டன.

4. 2011ஆம் ஆண்டில் மிகவும் நீண்டகாலமாக வெற்றிடமாக விளங்கிய வடக்கு கிழக்கு மாகாணங்களில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவுகளின் உதவிப் பணிப்பாளர் பதவிகளுக்கான வெற்றிடங்களை எம்மால் நிரப்ப முடிந்தது.

5. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் மீள் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளுள் நிகழ்ச்சித்திட்ட மேற்பார்வை கருத்திட்ட மதிப்பீடுகள், தகவல் தொழில்நுட்பம் என்பன தவறவிடப்பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக மனிதவளம் மற்றும் நிதி நடவடிக்கைகள் தொடர்பாக ஓர் பணிப்பாளர் மாத்திரமே நியமிக்கப்பட்டிருந்தார். இதற்கு மேலதிகமாக முன்னெச்சரிக்கை பிரிவு, அவசர நிலைமைகள் கருமமாற்றல் பிரிவு, என்பன இனங்காணப்பட்டுள்ளன.

மேற்கூறிய காரணங்களினால் கருத்திட்ட நிகழ்ச்சித்திட்ட மேற்பார்வை மற்றும் மனிதவள நிதி நடவடிக்கைகளுக்கான தீர்மானங்களை எடுத்தல் தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் பல கருத்திட்டங்களை சந்தித்துள்ளது. தகவல் தொழில்நுட்பத்துக்கான உபகரணங்களை பேனும் நடவடிக்கைகளும் தேக்க நிலையில் உள்ளன.

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள இருப்பதனால் அவசர நிலைமைகள் கருமமாற்றல் பிரிவின் கடமைப் பொறுப்புக்களும் அளவினை மீறியுள்ளன.

6. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் காரணமாக தகைமையுள்ள 57 பேருக்கு ஆட்சேர்ப்பு விதிமுறைகளுக்கு அமைய நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆட்சேர்ப்பு முறைக்கமைய 5 ஆண்டுகளுக்குள் தகைமைபெறும் நிபந்தனைகளின் அடிப்படையில் ஏனையோருக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

7. ஆட்சேர்ப்பு விதிமுறைகளுக்கமைய மனிதவளம் மற்றும் நிதி பணிப்பாளர் பதவியில் வெற்றிடத்தை நிரப்புவதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் பல தடவைகள் முயற்சித்த போதிலும் அது வெற்றி அடையவில்லை என்பதுடன் இதன் காரணமாக மனிதவளம் மற்றும் நிதிப்பிரிவின் செயலாற்றுத் திறன்மீது அது பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. மனிதவளம் மற்றும் நிதிப் பிரிவினை ஒழுங்கமைத்தல் தொடர்பான தீர்மானத்தை மீண்டும் மீளாய்வு செய்யுமாறு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட ஆட்சேர்ப்பினை மேற்கொள்ள பல தடவைகள் முயற்சித்த போதிலும் அவசர நிலைமை கருமமாற்றல் அபிவிருத்தி ஆகிய பிரிவுகளில் பணிப்பாளர் பதவிகள் வெற்றிடமாக உள்ளன.

8. திறைசேரியினால் தேவையான மூலதன நிதி விடுவிக்கப்படுவது தாமத மடைந்துள்ளதனால் திட்டமிடப்பட்ட காலத்தில் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியவில்லை.

9. தேசிய பாதுகாப்பு தினத்துக்கான பாடசாலைகளை கலந்து கொள்ளச் செய்தல் தற்பொது சில மாவட்டங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளது. இயற்கை

ஆபத்துக்கள் தொடர்பாக பாடசாலை மாணவர்களின் அறிவினை அதிகரிக்கும் நோக்குடனும் பாதுகாப்பான கலாச்சாரமொன்றை உருவாக்குவதன் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு நாட்டின் அனைத்து பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் குறைந்த பட்சம் குறிப்பிட்ட மாகாணங்களில் பாடசாலை பிள்ளைகளுக்கு மத்தியில் சித்திரம் மற்றும் கட்டுரைப் போட்டிகளை நடத்த சிபாரிசு செய்யப்படுகின்றது.

10. நிலையான அறிவுறுத்தல் பணிகளுக்காக அனர்த்த முகாமைத்துவத்தின் கீழ் உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாட்டு கலந்து கொள்ளலையும் உறுதிப்படுத்தவது முக்கியமாகும். மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாற்று ஒத்துழைப்புடன் 2011ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டதுடன் அவற்றை பலப்படுத்தவும் அவசியமாகும். இதற்காக அவர்களது கலந்து கொள்ளலை உறுதிப்படுத்துவதற்கான வழிமுறைகளையும் ஏற்படுத்தல் வேண்டும்.

11. அனர்த்தங்களைப் புறந்தள்ளுவதற்காக ஐக்கிய நாடுகள் வழிமுறை மூலம் உருவாக்கப்பட்ட ஹயோகோ(Hyogo) செயலாற்று கட்டமைப்புக்கு இலங்கை கையொப்பமிட்டுள்ளது. சகல அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், தொழிற்துறை சார்ந்தோர், ஊடகவியலாளர்கள், அங்கத்துவம் வகிக்கும் தேசிய அனர்த்த முகாமைத்துவக் குழுக்கள் என்பன மேற்கூறிய ஹயோகோ கட்டமைப்புக்கு இணங்கவே ஏற்படுத்தப்பட்டன. பலதரப்பட்ட உறுப்பு நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்தப் பட்ட அனர்த்த ஆபத்துக்களை களையும் நடவடிக்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக ஆராய குழு மீண்டும் ஒரு தடவை கூடியது.

12. ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் மத்திய சூழல் அதிகார சபையுடன் வட மாகாணத்தில் அரசினால் ஆரம்பிக்கப்பட்ட மாணவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துக்கு பெரும் ஒத்துழைப்பு கிடைத்துள்ளது. கம்பஹ மாவட்டத்திலும் ஊவா மற்றும் மத்திய மாகாணங்களிலும் உள்ள பாடசாலைகளுக்கு இவ்வாறான கற்கையொன்றுக்கான ஏற்பாடுகளை அனர்த்த முகாமைத்துவ நிலையம் மேற்கொண்டு வருகின்றது.

13. 2005ஆம் ஆண்டில் அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஆரம்பிக்கப்பட்ட நாள் தொடக்கம் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களினால் அந்த

நிறுவனத்துக்கு தேவையான தொழில்நுட்ப உதவிகள், நிதி உதவிகள் அனர்த்த ஆபத்துக்களை களைவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் வழங்கப்பட்டது. 2011ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட மொத்தப் பணம் 630,000 அமெரிக்க டொலர்களாகும். 2011ஆம் ஆண்டுக்காக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் உதவிகள் வழங்கப்பட்ட அனர்த்த ஆபத்துக்களை களையும் நிகழ்ச்சித்திட்டத்தினால் அடிப்படை கவனம் பிரதான இயற்கை அனர்த்தங்கள் தொடர்பான தகவல் சேவையை தயாரித்தல், ஒருங்கிணைந்த வழிமுறைக்கான சூழல் மதிப்பீடு அனர்த்தங்களை தாங்கிப்பிடிக்கும் வகையில் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளல், அரச நிறுவனங்கள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் தனியார் துறை நிறுவனங்கள் என்பவற்றுடன் ஒத்துழைப்பினைக் கட்டியெழுப்புதல் மற்றும் அனர்த்த தகவல் கட்டமைப்பொன்றை உருவாக்குதல் போன்ற விடயங்கள் மீது கவனம் செலுத்தப்பட்டது. மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவியுடன் பாடசாலைப் பிள்ளைகள் மற்றும் ஆபத்துக்குள்ளாகக் கூடிய மக்களுக்கு அறிவூட்டுவதற்கான கல்விசார் நூல்களும் தயாரிக்கப்பட்டன.

## 3. தேசிய மட்டத்திலான தலைமை நிகழ்ச்சித்திட்டம்

### 3.1 அனர்த்த முகாமைத்துவ சட்டமூலத்தை திருத்துதல்

அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவியுடன் 2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ சட்டமூலம் திருத்தப்பட்டு வருகின்றது. இந்த திருத்த சட்டமூலம் 2012ஆம் ஆண்டு அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய சபைக்கு வழங்கப்படவுள்ளது.

### 3.2 இலங்கை தேசிய அனர்த்த முகாமைத்துவ கொள்கை

இலங்கை தேசிய அனர்த்த முகாமைத்துவ கொள்கைத் திட்டம் அனர்த்த ஆபத்துக்களை எதிர்நோக்கியுள்ள பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்க்கை மற்றும் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான நோக்கத்துடன் நியாயமானதும் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான உரிமைகள் போன்றவற்றுக்கான வழிகாட்டல்கள், அடிப்படை கோட்பாடுகள், அனர்த்த முகாமைத்துவ சிந்தனையின் அடிப்படையிலான அனர்த்த முகாமைத்துவக் கொள்கைத்

திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்தக் கொள்கைத்திட்டம் அனுமதிக்காக தேசிய சபைக்கு வழங்குவதற்கு முன்னர் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றது.

## 3.3 தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டம்

தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டமானது 2006ஆம் ஆண்டு தயாரிக்க ஆரம்பிக்கப்பட்டது. திட்ட நகல் தொடர்பாக அனைத்து தரப்பு பிரதிநிதிகளுடனும் விரிவான முறையில் கலந்துரையாடப்பட்டது. 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பாரிய வெள்ளப்பெருக்கு காரணமாக இந்த திட்டத்தை திருத்த தீர்மானிக்கப் பட்டுள்ளது. கடந்த 2 வருடங்களாக ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள், பாதகமான காலநிலை மாற்றங்கள் என்பவற்றைக் கவனத்தில் கொண்டு தற்போது இந்த திட்டம் திருத்தப்பட்டு வருகின்றது.

## 3.4 தேசிய அவசர நிலைமைகள் கருமமாற்றல் திட்டம் (தே.அ.நி.க.தி)

தேசிய அவசர நிலைமைகள் திட்டமொன்றை தயாரிப்பதன் தேவை 2005 அனர்த்த முகாமைத்துவ சட்டமூலத்தினால் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் தேசிய அவசர நிலைமைகள் கருமமாற்றல் திட்டமொன்றை தயாரித்தல் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் நடைமுறையிலிருக்கும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் ஆரம்பிக்கப்பட்டது. (ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - இலங்கை) தேசிய, மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் அனர்த்த பிரதிபலிப்பு பொறிமுறை ஒன்றினை ஏற்படுத்துவதன் மூலம் அனைத்து வகையிலுமான அனர்த்த பதில் நடவடிக்கைகளுக்காக விரிவான கட்டமைப்பொன்று இந்த தேசிய அவசர நிலைமைகள் கருமமாற்றல் திட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்படவுள்ளது. சிறந்த முறையில் ஒருங்கிணைக்கப்பட்ட பயனுள்ள அவசர நிலைமை பதில் நடவடிக்கை கட்டமைப்பொன்றை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட அனர்த்த முகாமைத்துவ திட்ட செயற்பாட்டின் கட்டாய பிரிவாக இது கருதப்படுகின்றது. அனர்த்த பதில் நடவடிக்கைகள் தொடர்பாக பொறுப்புக்கூறும் நிறுவனங்களினால் இலகுவாக பரிசீலிக்கக்கூடிய வகையில் தேசிய அவசர நிலைமைகள் கருமமாற்றும் திட்டங்கள், அதனை ஏற்படுத்தியதன் பின்னர் இரண்டு மாதிரிகளினால் பெற்றுக்கொள்ள முடியும்.

## 3.5 தாபனத்திட்டம்

2010ஆம் ஆண்டுக்கான தாபனத் திட்டம் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டத்தின் படி நிதி ஏற்பாடுகள் கேட்கப்பட்டன. எவ்வாறாயினும், நிதிப்பிரச்சினை காரணமாக திட்டமிடப்பட்ட செயற்பாடுகளைக் குறைக்க நேரிட்டது. மீள் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளின் போது தாபன திட்டமிடல் தொடர்பான பிரச்சினைகளை உள்ளடக்க முடியாமல் போனது தாபன நடவடிக்கைகளை மீள ஒழுங்கமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அந்த பணிகள் 2012ஆம் ஆண்டில் பூர்த்தியாகும்.

## 3.6 குழுக்கள்

### 3.6.1 தொழில்நுட்ப ஆலோசனைக் குழு

அனர்த்த ஆபத்துக்களை எதிர்நோக்கியுள்ள பிரதேசங்களில் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான வழிகாட்டிகளை வழங்குவதற்கான குழு 2006ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. பலதரப்பட்ட தொழில்துறை நிறுவனங்கள் பல்கலைக் கழகங்கள், அரச திணைக்களங்கள், தாபனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் இதன் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர் அந்த உறுப்பினர்கள் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | பேராசிரியர் பிரியான் டயஸ் | சிவில் பொறியியலாளர் திணைக்களம், மொரட்டுவை பல்கலைக்கழகம் |
| 2. | திரு. UWL சந்திரதாஸ | ஆலோசகர், அனர்த்த முகாமைத்துவ நிலையம் |
| 3. | திருமதி. M.S. வீரசிங்ஹ | உதவி பொது முகாமையாளர் (E.S), தேசிய வீடமைப்பு அதிகாரசபை |
| 4. | திருமதி. CDW அழககோன் | பிரதிப் பணிப்பாளர் (E.S), கட்டிட திணைக்களம். செத்சிரிபாய, பத்தரமுல்லை. |
| 5. | பேராசிரியர். M.T.R. ஜயசிங்ஹ | சிவில் பொறியியலாளர் திணைக்களம், மொரட்டுவை பல்கலைக்கழகம் |
| 6. | பேராசிரியர். KDW. நந்தலால் | பேராதனை பல்கலைக்கழகம் |
| 7. | திரு. சிரோமல் பெர்னான்டோ | குழு உறுப்பினர், பொறியியலாளர் சங்கம் |

| | | |
|---|---|---|
| 8. | தி. KLS சஹபந்து | உதவிப் பொது முகாமையாளர், மத்திய பொறியியலாளர் ஆலோசனைப் பணியகம் |
| 9. | பேராசிரியர். லால் பாலசூரிய, | மொரட்டுவை பல்கலைக்கழகம் |
| 10. | திருமதி. குமாரி வீரசிங்ஹ | தேசிய கட்டிட ஆய்வு நிலையம் |
| 11. | திருமதி. S A குணசேகர | பிரதிப்பணிப்பாளர், கட்டிட திணைக்களம் |
| 12. | திரு. சூலா டி சில்வா | தலைவர், இலங்கை பொறியியலாளர் திணைக்களம் |
| 13. | திருமதி. P சிவப்பிரகாசபிள்ளை | இலங்கை திறந்த பல்கலைக்கழகம் |
| 14. | பேராசிரியர் ரஞ்சித் திசாநாயக்க | சிரேஷ்ட விரிவுரையாளர், பெராதனை பல்கலைக்கழகம் |
| 15. | திரு. வசந்த் புள்ளைநாயகம் | பிரக்டிகல் எக்ஷன் நிறுவனம் |
| 16. | செல்வி. அநோஜா செனவிரத்ன | உதவிப் பணிப்பாளர், அனர்த்த முகாமைத்துவ நிலையம் |
| 17. | திரு. தமித் சந்தரசேகர | ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் |

திரு. பிரியான் டயசின் தலைமையில் குழுவானது 2011இல் 15 தடவைகள் கூடியதுடன் அனர்த்த ஆபத்துக்களுக்கு உள்ளான பிரதேசங்களில் கட்டிட நிர்மாணங்களை மேற்கொள்பவர்களுக்கான வழிகாட்டி நூலை தயாரிப்பது அது தொடர்பான வழிகாட்டிகளை தயார் செய்வது இதன் நோக்கமாகும். பிரக்டிகல் அக்ஷன் நிறுவனத்தின் உதவியுடன் அனர்த்த ஆபத்துக்களை களைவது தொடர்பான அனுபவங்களை சித்தரிக்கும் கையேடும் தயாரிக்கப்பட்டுவருகின்றது. அனர்த்தங்களுக்கு ஈடு கொடுக்கும் குழுவினால் குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

**அனர்த்தங்களை தாங்குபிடிக்கும் பாதைகளை நிர்மாணித்தல் தொடர்பான குழு**

| | | |
|---|---|---|
| 1. | திரு. சரத் விஜேசேகர | பிரதிப்பணிப்பாளர், நீரியல் |
| 2. | செல்வி/திருமதி. குமாரி வீரசிங்ஹ | சிரேஷ்ட விஞ்ஞானி/NBRO |
| 3. | திரு. J. ஜயமான்ன | பணிப்பாளர், ஆராய்ச்சி அபிவிருத்தி/வீதி அபிவிருத்தி அதிகாரசபை |
| 4. | பேராசிரியர். I.R.A. வீரசேகர | தலைவர்/கட்டமைப்பு பொறியியல் சமூகம் |

| | | |
|---|---|---|
| 5. | செல்வி/திருமதி. N.P. துல்வள | சிரேஷ்ட வடிவமைப்பு பொறியியலாளர்/மத்திய பொறியியல் நிர்மாணப் பணியகம் |
| 6. | திரு. W.A. D. D. நந்த குமார | DGM சபை/ மத்திய பொறியியல் நிர்மாணப் பணியகம் |
| 7. | திரு. T. வசந்தகுமார் | சிரேஷ்ட வடிவமைப்பு பொறியியலாளர் / வீதி அபிவிருத்தி அதிகார சபை |
| 8. | செல்வி/திருமதி. P. விஜேரத்ன | உதவி பொது முகாமையாளர் / இலங்கை காணி மீட்பு அபிவிருத்தி கூட்டுத்தாபனம் |
| 9. | செல்வி/திருமதி. R. விமலசூரிய | வீதி அபிவிருத்தி அதிகார சபை |
| 10. | திரு. S.H.U. த சில்வா | பணிப்பாளர்/ வீதி அபிவிருத்தி அதிகார சபை |
| 11. | செல்வி/திருமதி. அநோஜா செனவிரத்ன | உதவிப்பணிப்பாளர், தணிப்பு/அ.மு.நி |
| 12. | திரு. கலன குரே | நிகழ்ச்சித்திட்ட அபிவிருத்தி இணைப்பாளர்/UNDP |
| 13. | திரு. தமித் சந்திரசேகர | நிகழ்ச்சி நிரல் உத்தியோகத்தர்/UNDP |

வீதி அமைப்பு வழிகாட்டிகளுடன் கூட்டிணைக்கப்பட வேண்டிய அனர்த்த அபாயக்கறைப்பு நியதிகளை கலந்தாலோசிப்பதற்காக உபகுழு ஐந்து முறை கூடியது.

### 3.6.2 அவசர பதில் நடவடிக்கைகள் குழு

இயற்கையினால் அல்லது மனிதனால் ஏற்படக்கூடிய அனர்த்தங்களின் போது வளங்களை நகர்த்தும் பணிகளில் நேரடியாக ஈடுபட்டுள்ள நிறுவனங்களுடன் தொடர்பை ஏற்படுத்தக்கூடிய அவசர பதிலிறுப்பு நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபட்டுள்ள அத்தியாவசிய சேவைகளின் சிரேஷ்ட உறுப்பினர்களையும் பங்குதார முகவர்களையும் அவசர பதிலிறுப்புக் குழு கொண்டுள்ளது. அனர்த்த முகாமைத்துவ நிலைய பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் இக்குழு ஒழுங்காகக் கூடுகின்றது. இக்குழுவின் பாரிய பணியாக அமைந்துள்ளது யாதெனில் அனர்த்தங்களின்போது அவசர பதிலிறுப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து எவ்விதமான அனர்த்தங்களுக்கும் முகம்கொடுப்பதற்கு தம்மை தயார் நிலையில் வைத்திருப்பதாகும். 2011ஆம் ஆண்டில் அவசரகால நிலைமை பதில் நடவடிக்கை குழு 4 தடவைகள் கூடியுள்ளது.

### 3.6.3 தேசிய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு குழு (NDMCC)

யுகோ பிரேம்வேக் போ அக்ஷன் (Hyogo Framework for Action) நடவடிக்கைக்கு அனுசரணை வழங்கி கண்காணித்து நடைமுறைப்படுத்தும் சர்வதேச அனர்த்தக்குறைப்பு மூல உபாயத்தின் (UNISDR) பரிந்துரைக்கு அமைய அரச முகவர்கள், தொண்டு நிறுவனங்கள், ஐ.நா. முகவர் நிறுவனங்கள், சர்வதேச அரசு சாரா முகவர்கள், அரச சாரா நிறுவனங்கள், ஊடகத்துறை, வல்லுனர்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை ஆகியவற்றை சார்ந்த பிரதிநிதித்துவம் செய்யும் உறுப்பினர்களை அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் தலைமையில் ஒருங்கிணைத்து அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஆகியவற்றால் தேசிய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு குழு தாபிக்கப்பட்டது. இதன் பிரதான இலக்கு யாதெனில் அனர்த்தப் பாதிப்புக்களை குறைத்தல் மற்றும் அவற்றை தாங்கிப்பிடிக்கும் சமூகத்தின் ஆற்றலை கட்டியெழுப்புதல் ஆகிய தேசிய முயற்சிக்கு பங்களிப்பை வழங்குவதாகும். 2007ஆம் ஆண்டு ஆறு நிறுவனங்களை பிரதிநிதித்துவம் செய்யும் 14 உறுப்பினர்களுடன் ஆரம்பித்து 2011ஆம் ஆண்டின் முடிவில் 73 நிறுவனங்களை பிரதிநிதித்துவம் செய்யும் 127 உறுப்பினர்களை கொண்டுள்ளது.

### 3.7 தேசத்துக்கு மகுடம் கண்காட்சி (தயட்ட கிருள)

அநுராதபுரத்தில் நடத்தப்பட்ட தேசத்துக்கு மகுடம் கண்காட்சியில் அனர்த்த முகாமைத்துவ நிலையமும் கலந்து கொண்டதுடன் பல்வேறு செயற்பாடுகளும் இடம்பெற்றன. கண்காட்சியின் முன்னர் விவசாயிகளுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் DOMஇன் அனுசரணையுடன் விழிப்புணர்வு நிகழ்ச்சியொன்று நடத்தப்பட்டது. மேலும் இப்பிரதேசத்தில் நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்துவதற்காக மூன்று குளங்கள் மீள்புனரமைப்பு செய்யப்பட்டன. மேலும் நீர்ப்பாசனத்திற்காக விவசாயக் கிணறுகளும் குடிநீர் கிணறுகளும் வரட்சிக்கு முகம் கொடுக்கும் பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்டன. அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகள் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் நோக்கில் கண்காட்சிக்கூடம் ஒன்று தாபிக்கப்பட்டதுடன் நடமாடும் விழிப்புணர்வு வாகனம் ஒன்று பயன்படுத்தப்பட்டு அனர்த்தங்களுடன் தொடர்புபட்ட காட்சிகள் காண்பிக்கப்பட்டன.

## 3.8 தேசிய பாதுகாப்பு தினம் 2011

2011ஆம் ஆண்டுக்கான தேசிய பாதுகாப்பு தினம் மட்டக்களப்பு மாவட்ட செயலகம் மற்றும் காத்தான்குடி நகர சபையின் உதவியுடன் மட்டக்களப்பு நகரில் அவ்வாண்டின் நவம்பர் மாதத்தில் நடத்தப்பட்டது. இந்த தேசிய பாதுகாப்பு தினத்தை ஒழுங்கு செய்ததன் நோக்கம் அனர்த்தங்களினால் உயிரிழந்தவர்களை நினைவுகூறுவது மற்றும் பாதுகாப்பினை மதிக்கும் கலாசாரமொன்றை உருவாக்குவதாகும். பொதுமக்கள் விசேடமாக பாடசாலை மாணவர்கள் மத்தியில் அனர்த்த ஆபத்துக்கள் தொடர்பாக அறிவூட்டலை வழங்குவதாகும். மாண்புமிகு பிரதமர் டி.எம். ஜயரத்ன பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். தேசிய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரினால் பரிசுகள் மற்றும் பணம் என்பன வழங்குவதன் ஊடாக இதற்கு தமது பூரண ஒத்துழைப்பினை தெரிவித்தனர். பாதுகாப்பு தின நிகழ்வு முழுமையாக சுயாதீன தொலைக்காட்சியினால் ஒளிபரப்பப்பட்டது.





மட்டக்களப்பில் நடைபெற்ற பாதுகாப்பு தின நிகழ்ச்சியில் பிரமுகர்கள் கலந்து கொள்ளல்.

## 3.9 அனர்த்த ஆபத்துக்களை களைவதற்கான தேசிய சம்மேளனம்

அனர்த்த ஆபத்துக்களை இல்லாமல் செய்தல் மற்றும் காலநிலை மாற்றங்களுக்கு ஏற்றவாறு தம்மை மாற்றிக்கொள்ளல் தொடர்பான சம்மேளனம் 2011 டிசெம்பர் மாதம் 25, 26ஆந் திகதிகளில் கொழும்பு, கோல்பேஸ் ஹோட்டலில் நடைபெற்றது. அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் வழிகாட்டலின்கீழ் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினாலும் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினாலும் முறையே மூன்றாவது தடவையாக இந்த சந்தர்ப்பம் ஒழுங்கு செய்யப்பட்டது. அனர்த்த ஆபத்துக்களைக் களைதல், காலநிலை மாற்றங்களுக்கு அமைய தம்மை மாற்றியமைத்துக் கொள்ளல் தொடர்பான இந்த சம்மேளனத்தின் நோக்கம் இலங்கையில் அனர்த்த ஆபத்துக்களை

களைதல் மற்றும் மாற்றங்களுக்கமைய தம்மை மாற்றியமைத்துக் கொள்ளல் தொடர்பான பிரச்சினைகளை கலந்துரையாடுவதும் அதற்காக எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தக் கூடிய செயற்திட்டங்களை இனங்காணுதலாகும்.

தற்போதைய அபிவிருத்திக்கான முயற்சிகளுக்கமைய அனர்த்த ஆபத்துக்களை களைவதற்காக அதற்கான அணுகுமுறைகள், அனர்த்த ஆபத்துக்களை களைவதற்கான தனியார் துறையினரின் பங்களிப்பு அனர்த்த ஆபத்துக்களை குறைப்பதற்கான உபகரணங்களை பாவித்தல் மற்றும் காலநிலை மாற்றங்கள் தொடர்பாக சகல தகவல்களையும் பெற்றுக்கொள்ளக்கூடிய இணையத்தள நுழைவாயிலொன்றை ஆரம்பிப்பது போன்ற அனர்த்த முகாமைத்துவ தொனிப்பொருளுடன் தொடர்புபட்ட துறைகள் தொடர்பாக மூன்று கலந்துரையாடல்களும் இந்த கருத்தரங்கு மாநாட்டில் அடங்கியிருந்தது.

**பணிப்பாளரின் அறிக்கை**

## 4. அனர்த்த ஒழிப்பு மற்றும் ஆய்வு அபிவிருத்திப் பிரிவு

### 4.1 பின்புலம்

கடந்த 5 ஆண்டுகளுடன் தொடர்புபட்டவாறு அனர்த்தங்களை ஒழித்தல் மற்றும் ஆய்வு அறிவுறுத்தல் பிரிவினால் பகுப்பாய்வு செய்யப்பட்ட அனர்த்தங்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் தரவுகளுக்கமைய வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, வரட்சி, சூறாவளி, கடலோர அனர்த்தங்கள் மற்றும் விலங்குகளின் தாக்குதல்கள் போன்ற அனர்த்தங்கள் அடிக்கடி ஏற்படுவதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அனர்த்தங்களுக்கான பதில் நடவடிக்கைகள் நிவாரணங்களை வழங்குதல், புனரமைப்புப் பணிகள், மற்றும் மீள் நிர்மாணப் பணிகளுக்கு பெருமளவு பணத்தை அரசாங்கத்தினால் செலவிட நேரிட்டுள்ள. இந்த அனர்த்தங்கள் தேசிய பொருளாதாரம் மீது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் இந்த அனர்த்தங்கள் சமூக வாழ்க்கைக்கு பாதகமான நிலைமைகளை ஏற்படுத்துவதுடன் பிரதேச மக்களின் நாளாந்த வருமானங்கள் மீதும் பெறும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. எனவே நாட்டில் அனர்த்தங்களை ஒழிப்பதற்கான முக்கியத்துவத்தை அனர்த்த முகாமைத்துவ நிலையம் உணர்ந்துள்ளது. அனர்த்தங்கள் மற்றும் அவற்றினால் ஏற்படும் விளைவுகள் தொடர்பான கடந்தகால அறிக்கைகளின் அடிப்படையில் அனர்த்த முகாமைத்துவ நிலையம் அனர்த்தங்கள் ஏற்படக்கூடிய மாவட்டங்களை அவற்றின் முன்னுரிமை அடிப்படையில் பட்டியல் படுத்தியுள்ளது.

## 4.2 அனர்த்தங்களை ஒழிக்கும் திட்டம்

அனர்த்தங்களை ஒழிப்பது தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் தேசிய திட்டமிடல் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்ட யோசனைகளுக்கு பதில் நடவடிக்கையாக 2011 வரவு செலவுத்திட்டத்தின் மூலம் பின்வரும் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

அட்டவணை 1: 2011ஆம் ஆண்டில் அனர்த்த ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு பண ஒதுக்குதல்.

| கருத்திட்டம் | ஒதுக்கப்பட்ட தொகை (ரூ.மி) |
|---|---|
| அனர்த்த ஒழிப்புத்திட்டம் | 120.00 |
| அம்பாறை, மட்டக்களப்பு, பொலன்னறுவை, புத்தளம் மாவட்டங்களில் வெள்ள அனர்த்தங்களை ஒழிப்பதற்கான திட்டம் | 30.00 |
| கண்டி, மாத்தளை, பதுளை, நுவரெலியா மாவட்டங்களில் மண்சரிவு, கற்பாறைகள் சரிதல் இடம்பெறும் பிரதேசங்களில் சரிவுகளை குறைத்தலும் சரிவுகளை பலப்படுத்தலும். | 36.00 |

### 4.2.1. இலங்கையில் அனர்த்தங்களை ஒழிப்பதற்கான கருத்திட்டங்கள்

ஒட்டுமொத்தமான நாட்டையும் உள்ளடக்கி நடைமுறைப்படுத்தப்பட்ட அனர்த்த ஒழிப்புக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 120 மில்லியன் ரூபா ஒதுக்கப் பட்டுள்ளதுடன் அந்த அனர்த்த ஒழிப்புத் திட்டங்களினால் உள்ளடக்கப்பட்ட மாவட்டங்கள் இரண்டாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. அனர்த்த ஆபத்துக்களை ஒழிப்பதற்காக பாதிப்புக்களின் முன்னுரிமை அடிப்படையில் இந்த கருத்திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இரண்டாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு முழுமையான பணம் வெள்ளப்பெருக்கு, வரட்சி, மண்சரிவு, மிருகங்களின் தாக்குதல்கள் போன்ற பாரிய அனர்த்தங்களை ஒழிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2: அனர்த்தங்களுக்கான வரவுசெலவு ஒதுக்கம்**

| **அனர்த்தம்** | **உள்வாங்கப்பட்ட மாவட்டங்கள்** | **ஒதுக்கப்பட்ட தொகை (ரூ.மி)** |
|---|---|---|
| மிருகங்களின் தாக்குதல்கள் | மாத்தறை | 4.6 |
| வரட்சி | மொனராகலை, குருநாகல், கண்டி, அநுராதபுரம், மன்னார், வவுனியா, பதுளை, அம்பாந்தோட்டை | 45.1 |
| வெள்ளப்பெருக்கு | நுவரெலியா, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், இரத்தினபுரி, கம்பஹ, அம்பாந்தோட்டை | 50.2 |
| மண்சரிவுகள் கற்சுவர்களை கட்டுதல் | காலி, மாத்தறை, கேகாலை, மாத்தறை | 20.1 |
| **மொத்தம்** | | **120** |

**அனர்த்தங்களை ஒழிப்பதற்காக வரவு செலவுத்திட்டம் மூலம் பணம் ஒதுக்குதல்**




வரைபடம் 1. 2011 வரவு செலவுத்திட்டம் மூலம் பணம் ஒதுக்கல்

வரவு செலவுத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவினம் 110 மில்லியன் ரூபா ஆகும் என்பதுடன் (92%) இந்த கருத்திட்டங்களின் பெரும்பாலானவை நிதி ஆண்டு முடிவதற்குள் பூர்த்தி செய்யப்பட்டதனால் கருத்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் 95% த்தையும் தாண்டிச் சென்றது. குறிப்பிட்ட ஆண்டில் எதிர்பார்க்கப்பட்டவாறு ஏற்பட்ட பாதகமான காலநிலை தன்மையினால் பொலன்னறுவை, மட்டக்களப்பு, அம்பாறை, மன்னார், அநுராதபுரம் மாவட்டங்களில் கருத்திட்டங்களை பூர்த்தி செய்வது

தாமதமடைந்தது. 2012ஆம் ஆண்டின் முதலாவது தவணையில் இந்த கருத்திட்டங்களை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

### 4.2.2. அம்பாறை, மட்டக்களப்பு, பொலன்னறுவை மற்றும் புத்தளம் மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட வெள்ளப்பெருக்கினை களைவதற்கான கருத்திட்டங்கள்

2007இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் இது 3 வருடங்களாக நடைமுறையிலிருந்தது. ஆரம்பத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த தொகை 350 மில்லியன் ரூபாவாக இருந்ததுடன் 2009 மற்றும் 2010ஆம் ஆண்டுகளின் முறையே 35 மில்லியன் ரூபா மற்றும் 30 மில்லியன் ரூபாவாக இருந்தது. அதேபோன்று மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கு ஆபத்தினை தணிக்கும் நடவடிக்கை தொடர்பாக முழுமையான ஆய்வு 2010இல் பூர்த்தி செய்யப்பட்டது. மொத்த செலவினம் தொடர்பான மதிப்பீட்டுடன் நீண்டகால அடிப்படையில் மற்றும் குறுகியகால அடிப்படையில் வெள்ளப் பெருக்கினை தடுப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக இந்த ஆய்வின் மூலம் யோசனைகள் முன்வைக்கப்பட்டன. இந்த ஆய்வின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு விபரமான பிரேரணை யொன்று தயாரிக்கப்பட்டு தேசிய திட்டமிடல் திணைக்களத்துக்கு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக வெளிவாரி நிறுவனங்களிடமிருந்து நிதி ஒதுக்கங்களை வழங்குமாறு கேட்கப்பட்டது. இரண்டு ஓடங்கள் கொள்வனவு செய்யப்பட்டதன் பின்னர் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் கால்வாய்களை துப்பரவு செய்வதற்கான குறுகியகால நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. எரிபொருள் மற்றும் தொழிலாளர் கட்டணங்களை செலுத்துவதற்கான பணம் மாவட்ட செயலகங்களுக்கு வழங்கப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் நீர் வழிந்தோட முடியாமல் இருந்த மதகுகள் இரண்டு மீண்டும் நிர்மாணிக்கப்பட்டது. அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் கால்வாய்களை துப்பரவு செய்யும் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக பொலன்னறுவை மாவட்டத்தில் மால ஓயா வெள்ளப்பெருக்கு பாதுகாப்பு அணைக்கட்டினை பலப்படுத்தல் மற்றும் புத்தளம் மாவட்டத்தில் சிலாபம், முந்தல் பிரதேசப் பிரிவுகளில் வெள்ளப்பெருக்கினை தணிக்கும் சிறு அளவிலான கருத்திட்டங்கள் 2011இல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது.

**அம்பாறை, மட்டக்களப்பு, புத்தளம், பொலன்னறுவைமாவட்டங்களில் வெள்ளப்பெருக்கினை தடுப்பதற்கான வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கம்**




ஒதுக்கப்பட்ட மொத்த தொகை 30 மில்லியன் ரூபாவாகும் என்பதுடன் புத்தளம் மற்றும் அம்பாறை மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்களில் பல நிதி ஆண்டு முடிவதற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டதுடன் மேற்கூறிய திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் 85% வீதத்தையும் தாண்டியுள்ளது.

**4.2.3.** **கண்டி, மாத்தளை, பதுளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் மண்சரிவுகள் மற்றும் மலைகள் சரிந்துவிழல் போன்ற ஆபத்துக்கள் நிறைந்த பிரதேசங்களில் மலைச்சரிவுகளை பலப்படுத்தல் மற்றும் சரிவுகளை குறைத்தல் கருத்திட்டங்கள் 2009இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் இந்த கருத்திட்டம் மூன்று வருடங்களாகும். இந்த கருத்திட்டங்களின் கீழ் தேசிய கட்டிட ஆய்வு நிறுவனம் பின்வரும் பணிகளை மேற்கொள்ள உள்ளது.**

| இல. | விபரங்கள் | தொகை (ரூ.மி.) |
|---|---|---|
| 01 | நுவரெலியா மாவட்டத்தில் வலபனே மற்றும் ஹங்குரன்கெத்த பிரதேச செயலகப் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் மண்சரிவுகளை தடுப்பதற்கான மூலோபாயங்களை வகுத்தல். | 75.0 |
| 02 | பதியபெலல்ல நகரத்தை மண்சரிவுகளிலிருந்து பாதுகாப்பதற்கான மூலோபாயங்களை அறிமுகப்படுத்தல். | 30.0 |
| 03 | தகுந்த நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் பேராதனை நகரில் மண்சரிவு ஏற்படுவதை குறைத்தல் | 40.0 |
| 04 | அனர்த்த ஆபத்துக்களை ஒழிப்பதற்கான வழிமுறைகளைக் கொண்ட முறையான காணிகள் பயன்பாட்டு வழிமுறையொன்றை தோற்றுவித்தல் மற்றும் மாத்தறை மாவட்டத்தில் அனர்த்தங்கள் ஏற்படக்கூடியவாறான மனித செயற்பாடுகளை இல்லாமல் செய்தல். | 2.43 |
| 05 | பதுளை மாவட்டத்தில் உள்ள நிலையற்ற சரிவுகள் மற்றும் மண்சரிவு பிரதேசங்களை இனங்கண்டு மண்சரிவுகள் ஏற்படாதவாறு காணிகளை பயன்படுத்தும் முறைகளை அறிமுகப்படுத்தல். | 3.50 |
| | **மொத்தம்** | **150.93** |

விடய இல. 02 மற்றும் விடய இலக்கம் 03க்காக மீண்டும் மதிப்பீடுகள் தயாரிக்கப் பட்டுள்ளதுடன் 2011 டிசெம்பர் மாதத்தில் மதிப்பீட்டுக்கான அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டது.

## 4.3 அனர்த்த ஆபத்துக்கள் தொடர்பான கோவையொன்றை தயாரிப்பது தொடர்பான கருத்திட்டம்

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் அனர்த்த ஆபத்துக்களை குறைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் ஆபத்து நிலைமைகள் தொடர்பான தகவல் கோவையொன்றை தயாரிக்கும் பணிகள் 2009இல் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப கட்டமாக மண்சரிவுகள், வெள்ளப்பெருக்கு, வறட்சி, நில நடுக்கம், கடலோர அனர்த்தங்கள் ஏற்படக்கூடிய பிரதேசங்கள் தொடர்பாக அனர்த்த வரைபடங்கள் தயாரிக்கும் நடவடிக்கைகள் அனர்த்த முகாமைத்தவ நிலையத்தினால் பொறுப்பேற்கப்பட்டது. இந்த அனர்த்த வரைபடங்கள் தயாரிப்பு பூர்த்தியடைந்ததன் பின்னர் ஒட்டுமொத்தமான படங்களை தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அனர்த்த வரைபடங்களை தயாரிப்பதற்காக பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் தொடர்பாக அனைத்து தரப்பு நிறுவனங்களும் முன்வைத்த இணக்கப்பாட்டுக்கு அமைய அதனை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறான வழிமுறை தொடர்பாக இணக்கப்பாட்டுக்கு வருவதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் நடத்தப்படும் செயலமர்வுக்கு அனைத்து தரப்பினருக்கும் அழைப்பு விடுக்கப்படும்.

### 4.3.1 கரையோர அனர்த்தங்கள் வரைபட கருத்திட்டம்

இந்த கருத்திட்டத்தின் மூலம் உள்வாங்கப்படும் அனர்த்த வரைபடங்கள் நான்கு வகைப்படும். சுனாமி நிலைமைகள், கடலரிப்பு, கடல் மட்டம் அதிகரித்தல், கடல் கொந்தளிப்பு நிலைமைகள் என்பன அந்த நான்கு வகைகளுமாகும். கடலரிப்பு தவிர்ந்த ஏனைய துறைகளுக்காக அனர்த்த வரைபடங்கள் 2011 டிசெம்பர் மாதம் 30ஆந் திகதியாகும் போது பூர்த்தி செய்யப்பட்டது. காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களுக்கான கடலரிப்பு வரைபடங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. மீதி 2012 மார்ச் மாதம் பூர்த்தி செய்யப்படவுள்ளது. குறிப்பிட்ட வரைபடங்களை தயாரிப்பதற்காக தேவைப்படும் அனைவருக்கும் அந்த வரைபடங்களை அறிமுகம் செய்து வைப்பதற்கான செயலமர்வு காலி மாவட்ட அலுவலகத்தில் நடத்தப்பட்டது.

### 4.3.2 மண்சரிவு அனர்த்த வரைப்பட தயாரிப்பு

நுவரெலியா, காலி மாவட்டங்களுக்காக 1:10,000 அளவிலான மண்சரிவு அனர்த்த வரைபடங்கள் தேசிய கட்டிட ஆய்வு நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது. வலபனே மற்றும் ஹங்கரன்கெத்த பிரதேச செயலாளர் பிரிவுக்குள் இந்த மண்சரிவு வரைபடங்களை பாவிப்பதற்கு தேவைப்படும் நபர்களுக்கு அந்த வரைபடங்களை அறிமுகப்படுத்தும் செயலமர்வு குறிப்பிட்ட மாவட்ட அலுவலகத்தில் நடத்தப்பட்டது.

### 4.3.3 வறட்சி அனர்த்த வரைபடங்களை தயாரித்தல்

வறட்சி அனர்த்த வரைபடங்களை தயார் செய்யும் பணிகள் பேராதனை பல்கலைக் கழகத்தின் தொழில்நுட்ப உதவியுடன் மேற்கொண்டு விவசாய திணைக்களம் பொறுப்பெற்றது. வரைபடங்களை தயாரிக்கும் பணிகள், பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் பலதரப்பட்ட தரப்பு நிருவனங்களினால் அனர்த்த வரைபடங்கள் மற்றும் அதற்கான வழிமுறைகள் சம்பந்தமாக திருத்தங்களை மேற்கொள்வதற்கான தேசிய மட்டத்திலான செயலமர்வு 2011 ஜூலை மாதத்தில் நடாத்தப்பட்டது. குறிப்பிட்ட தரப்பினரால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 4.3.4 சூறாவளி அனர்த்த வரைபடங்களை தயாரித்தல்

சூறாவளி அனர்த்தங்களை வரைபடங்களில் தயாரிக்கும் பணிகளுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் பொறுப்பாக இருக்கின்றது. புள்ளிவிபரங்களைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் அதற்கான வழிமுறைகளை கலந்துரையாடுவதற்கான கூட்டம் 2011ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது. குறிப்பிட்ட தரவுகளைப் பதிவிறக்கம் செய்வதற்காக வளிமண்டலவியல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் ஐக்கிய நாடுகள் நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைத்தது. குறிப்பிட்ட வழிமுறையில் காணப்படும் குறைபாடுகளை நீக்கி வரைபட நகலை தயாரிப்பதற்கு அனர்த்த முகாமைத்துவ நிலையமும் வளிமண்டலவியல் திணைக்களமும் ஒத்துழைப்பு வழங்குகின்றன.

### 4.3.5 வெள்ளப்பெருக்கு அனர்த்த வரைபடங்களை தயாரித்தல்

களனி, களுகங்கை, ஜின்கங்கை, நில்வளகங்கை ஆகிய பிரதான ஆறுகளின் வெள்ளப்பெருக்கு அனர்த்தம் தொடர்பாக வரைபடங்களை தயாரிக்கும் பணிகளுக்கு நீர்ப்பாசனத் திணைக்களம் பொறுப்பாக இருக்கின்றது. இது தொடர்பாக நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகளுடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன.

## 4.4 அனர்த்த வரைபடங்களை தயாரிப்பதற்காக செய்மதி தொழில்நுட்பத்தை பயன்படுத்தல்.

ஜப்பான் விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் அனர்த்த நிலைமைகளின் போது செய்மதிப்படங்களை பதிவிறக்கம் செய்யக்கூடிய செயல்முறையொன்று தயாரிக்கப்பட்டது. 2011இல் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக செய்மதிப்படங்கள் தயாரிக்கப்பட்டு பயனுள்ள நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது.

# 5. முன்ஆயத்த திட்டமிடல் பிரிவு

## 5.1. மாவட்டங்கள், பிரதேச செயலாளர் பிரிவுகள்

கிராம உத்தியோகத்தர் பிரிவு அடிப்படையில் அனர்த்த பதில் நடவடிக்கைகளுக்கான முன் ஆயத்த திட்டங்களை தயாரித்தல் மாவட்ட இணைப்பு பிரிவுகளுக்கு தேவையான வழிகாட்டல்கள் மற்றும் ஒத்துழைப்பினை வழங்குவதன் மூலம் தேசிய மட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ திட்டமொன்றை தயாரிப்பதன் பணிகளை ஒருங்கிணைத்தல் முன் ஆயத்தப் பிரிவின் பொறுப்பாகும். அரச துறையின் சகல நிறுவனங்களுக்காக முன் ஆயத்த திட்டங்களை தயாரிப்பதற்காக ஒத்துழைப்பினை வழங்குவதும் இப்பிரிவின் கடமையாகும்.

## 5.2 அனர்த்தங்களின் போது பதில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மாவட்ட அடிப்படையிலான அனர்த்தங்களுக்கான முன்ஆயத்தங்களை திட்டமிடல்

மாவட்ட குழுக்கள், துணைக்குழுக்கள் என்பவற்றின் உறுப்பினர்களின் பெயர்கள் அவர்களது பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் மாவட்டம் சம்பந்தமான தகவல்கள், மாவட்டத்தில் சகல பிரதேசங்களில் நிலவும் அனர்த்தங்கள் தொடர்பான தகவல்கள் பிரதேசத்தில் இருக்கும் வளங்கள் அனர்த்த பதில் நடவடிக்கைகளில் ஈடுபடும் பலதரப்பட்ட தரப்பினரின் பொறுப்புக்கள் போன்றவை அனர்த்த முன் ஆயத்த திட்டத்தில் உள்ளடங்குகின்றது.

2010 இறுதியாகும் போது மாவட்ட முன் அயத்த திட்டங்கள் 16 தயாரிக்கப்பட்டிருந்தது. வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களுக்காக மாவட்ட முன் ஆயத்த திட்டங்களை தயார் செய்வதற்காக அடிப்படை அறிவூட்டல் செயலமர்வுகள் நடத்தப்பட்டன. இதற்கான தரவுகள் தற்போது சேகரிக்கப்பட்டு வருகின்றன. மீதி 09 மாவட்டங்களான வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, மொனராகலை, மன்னார் மாவட்டங்களுக்கான முன் ஆயத்த திட்டங்களை தயாரித்தல் 2012ஆம் ஆண்டின் இறுதியாகும்போது பூர்த்தி செய்வதற்கு அனர்த்த முகாமைத்துவ நிலையம் திட்டமிடப் பட்டுள்ளது.

### 5.2.1 பிரதேச செயலாளர் பிரிவுகள் அடிப்படையில் முன்ஆயத்தம் மற்றும் அவசர நிலைமைகள் பதில் நடவடிக்கைகளுக்கான திட்டங்கள்

2011ஆம் ஆண்டினுள் பிரதேச மட்டத்திலான அதிகாரிகள் அனர்த்த முன் ஆயத்த திட்டங்கள் மற்றும் மேற்கூறிய சேகரிப்பு தேவைகளுக்கமைய அறிவூட்டுவதற்கான அடிப்படை செயலமர்வுகள் 09 மாவட்டங்களை உள்ளடங்கும் வகையில் 26 பிரிவுகளில் நடத்தப்பட்டது. தயாரிக்கப்பட்ட திட்டங்களை சமர்ப்பித்தல் மற்றும் அவற்றில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக இணக்கப்பாடொன்றினை காண்பதற்காக அதற்கான கற்கை செயலமர்வுகள் 17 பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் 14 மாவட்டங்களில் நடத்தப்பட்டன. பிரதேச செயலாளர் மட்டத்தில் முன் ஆயத்த 5 திட்டங்களை அச்சிடும் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு அடிப்படையில் ஆரம்ப செயலமர்வுகள் | பிரதேச செயலாளர் பிரிவு அடிப்படையில் இறுதி செயலமர்வுகள் |
|---|---|---|
| அம்பாறை | | 1 |
| அநுராதபுரம் | | 1 |
| பதுளை | 2 | |
| மட்டக்களப்பு | | 1 |
| கொழும்பு | | 1 |
| காலி | 2 | |
| கம்பஹா | 3 | 2 |
| களுத்துறை | | 2 |
| கண்டி | 3 | 1 |
| கேகாலை | 1 | 1 |
| குருநாகல் | 4 | |
| மாத்தளை | | 1 |
| மாத்தறை | 4 | |
| மொனராகலை | | 2 |
| பொலன்னறுவை | 2 | 1 |
| புத்தளம் | 3 | 1 |
| இரத்தினபுரி | 2 | 2 |
| **மொத்தம்** | **26** | **17** |

### 5.2.2 கிராம உத்தியோகத்தர் பிரிவு அடிப்படையில் முன் ஆயத்த நடவடிக்கைகள்

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு குழுக்களின் உதவிப் பணிப்பாளர்கள் மற்றும் அவர்களின் பதவியணியினரால் கிராம அடிப்படையில் குழுக்களை அமைத்து சமூக அடிப்படையிலான அனர்த்த முகாமைத்தவம் தொடர்பான அனர்த்த குழு உறுப்பினர்களுக்கு அறிவூட்டும் கடமையை பொறுப்பேற்றுள்ளது. மேலும் சமூக அடிப்படையிலான அனர்த்த வரைபடங்களை தயாரித்தல் அனர்த்தத்தின் போது பாதுகாப்பு இடங்களுக்கு செல்லக்கூடிய பாதுகாப்பான பாதைகள் மற்றும் பாதுகாப்பான இடங்களை இனங்காணுதல், முதலுதவிகள், இடம்பெயர்ந்த மக்களுக்கான முகாம்களை அமைத்தல், மற்றும் அவற்றை நிர்வகித்தல் என்பவை தொடர்பாக அவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மெகாபோன், மக்களுடன் தொடர்பாடலை ஏற்படுத்தும் முறைகள், சைரன், மழைவீழ்ச்சி அளவீட்டு கருவிகள் போன்ற முன்னெச்சரிக்கைகளை விடுக்கக்கூடிய அடிப்படை உபகரணங்களும் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

2011ஆம் ஆண்டு முடிவடையும் போது கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் அடிப்படையில் அறிவூட்டும் 293 நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் 16 ஆரம்ப நிகழ்ச்சித்திட்டங்கள் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் அனர்த்த முன் அயத்த திட்டங்களை ஏற்படுத்துவதற்காக நடத்தப்பட்டன.

### 5.2.3 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் அடிப்படையில் ஒத்திகைகள்

மீளாய்வு ஆண்டினுள் இங்கு கீழ் விபரிக்கப்பட்டுள்ளவாறு விசேடமாக மண்சரிவுகள், நீர்த்தேக்க அணைக்கட்டுக்கள் உடைதல், வெள்ளப்பெருக்கு, சுனாமி போன்ற அனர்த்தங்களினால் பாதிக்கக்கூடிய பிரதேசங்களில் 141 ஒத்திகைகள் நடத்தப்பட்டன:

| மாவட்டம் | சுனாமி | மண்சரிவு | வெள்ளபெருக்கு | அணைக்கட்டு பாதுகாப்பு |
|---|---|---|---|---|
| அம்பாறை | 10 | | | |
| கொழும்பு | 5 | | | |
| காலி | 19 | | | |
| கம்பஹா | 5 | | | |
| ஹம்பாந்தோட்டை | 11 | | | 5 |
| களுத்துறை | 3 | | 6 | |
| கண்டி | | 1 | | |
| மாத்தளை | | 3 | | |
| நுவரெலியா | | 11 | | |
| திருகோணமலை | 5 | | | |
| மாத்தறை | 10 | | | |
| புத்தளம் | 9 | | | |
| யாழ்ப்பாணம் | 3 | | | |
| கிளிநொச்சி | 4 | | | |
| மட்டக்களப்பு | 9 | | | |
| மன்னார் | 13 | | | |
| முல்லைத்தீவு | 9 | | | |
| **மொத்தம்** | **115** | **15** | **6** | **5** |





*மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்து செய்வது தொடர்பான ஒத்திகை*





*2011.12.20ஆந் திகதி முல்லியன் கோட்டைக்காடு கிராமத்தில் நடத்தப்பட்ட அனர்த்தங்களின்போது*

### 5.2.4 பாரியளவிலான நீர்த்தேக்க அணைக்கட்டுக்கள் தொடர்பான அனர்த்த முன் ஆயத்த நடவடிக்கைகள்

சூறாவளி நிலைமைகளின் போது அல்லது நில நடுக்கம் காரணமாக நீர்த்தேக்கங்கள் அணைக்கட்டுக்கள் தொடர்பான அனர்த்தம் ஏற்படக்கூடிய நிலைமைகளை கவனத்திற் கொண்டு நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சினால் தற்போது நடைமுறையிலிருக்கும் நீர்த்தேக்க அணைக்கட்டுக்களின் பாதுகாப்பு மற்றும் நீர்வள திட்டமிடல் கருத்திட்டத்தின் உதவியுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட நீர்த்தேக்கங்கள் அனைத்தினதும் தாழ் பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு அவர்களது முன் ஆயத்த சாத்தியத்தை மேம்படுத்தும் நோக்குடன் அதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் அரம்பிக்கப்பட்டன. பொலன்னறுவை மாவட்டத்தில் 10 பாரிய தேர்க்க அணைக்கட்டுக்களை தெரிவுசெய்து அவர்களுக்காக 10 அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. அம்பாந்தோட்டை மாவட்டத்தில் லுனுகம்வெஹெர நீர்த்தேக்கத்தின் தாழ் பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு அனர்த்தங்களின் போது பாதுகாப்பான இடங்களை நோக்கிச் செல்லுதல் தொடர்பான 5 செயலமர்வுகள் நடத்தப்பட்டன.

### 5.2.5 பாடசாலைகளுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களும் சுனாமி அனர்த்தங்களின் போது பாடசாலை மாணவர்களை பாதுகாப்பான இடத்துக்கு அழைத்து செல்லல் தொடர்பான ஒத்தகை நிகழ்ச்சித்திட்டம்

தயாரிக்கப்பட்ட வழிகாட்டல்களைப் பயன்படுத்தி அனர்த்த நிலைமைகளை எதிர்நோக்கும் வாய்ப்புக்களைக் கொண்ட பாடசாலைகளை தெரிவுசெய்து பாதுகாப்புத் திட்டங்களை தயாரிக்க கல்வி அமைச்சுக்கும் ஜேர்மன் சர்வதேச அமைப்புக்கும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் ஒத்துழைப்பு வழங்கப்பட்டதுடன் பாடசாலை மாணவர்களின் கலந்து கொள்ளல் உட்பட அனர்த்த நிலைமைகளின் போது பாதுகாப்பான இடங்களுக்கு செல்லல் தொடர்பான ஒத்திகைகளும் நடத்தப்பட்டன. ஜேர்மன் சர்வதேச நிறுவகம் மற்றும் கல்வித் துறையில் பணியாற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களினால் தேவையான பணமும் வழங்கப்பட்டது.

| **மாவட்டம்** | **பாடசாலைகளுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள்** | **சுனாமி நிலைமைகளின்போது பாடசாலை மாணவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லல் தொடர்பான ஒத்திகைகள்** |
|---|---|---|
| அம்பாறை | 8 | |
| காலி | 14 | 12 |
| ஹம்பாந்தோட்டை | 1 | |
| களுத்துறை | 2 | |
| கேகாலை | 2 | |
| குருநாகல் | 5 | |
| மன்னார் | 10 | |
| மாத்தளை | 2 | |
| மாத்தறை | 1 | |
| புத்தளம் | 3 | |
| இரத்தினபுரி | 5 | |
| பதுளை | 12 | |
| **மொத்தம்** | **65** | **12** |




*பாடசாலை அனர்த்த பாதுகாப்புக்கான தேசிய வழிகாட்டி கோவை*

## 5.3 அனர்த்தங்கள் ஏற்பட வாய்ப்புள்ள பகுதிகளில் அனர்த்த முன்னெச்சரிக்கை சாத்தியத்தை மேம்படுத்தல் / உபகரணங்களை கொள்வனவு செய்தல்.

அவசர நிலைமைகளின்போது பதில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு போதுமான உபகரணங்கள் உள்ளூராட்சி மன்றங்கள் வசம் இல்லாமல் இருப்பதை கடந்தகால அனர்த்தங்களின்போது உணரமுடிந்தது. நிர்வாக எல்லைகளை மீறி வளங்களை பகிர்ந்து கொள்வதில் ஏற்படும் நிர்வாகப் பிரச்சினைகள் காரணமாக ஏனைய உள்ளூர் மன்றங்களுடனான வரையறுக்கப்பட்ட பறிமாற்றங்களைக்கூட செய்ய முடியாமல் உள்ளது. இத்தகைய பின்னணியில் அனர்த்தங்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புள்ள பிரதேசங்களில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு நீர் பவுசர்கள், பெகோ இயந்திரங்கள் போன்றவற்றை வழங்க அனர்த்த முகாமைத்துவ நிலையம் நடவடிக்கை எடுத்தது.

மேலும் அனர்த்த பதில் நடவடிக்கைகளுக்கான சாத்தியத்தை அதிகரிப்பதற்காக கிராமிய மட்டத்திலான அமைப்புக்களுக்கு உபகரணங்களும் வழங்கப்பட்டன. முன் ஆயத்த திட்டங்களுக்காக 29 மில்லியன் ரூபா பெறுமதியான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக 14.6 மில்லியன் ரூபா அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் செலவிடப்பட்டது.



**கௌரவ பிரதமர் மட்டக்களப்பு மாவட்டத்தில் குழு அங்கத்தவர் ஒருவருக்கு சமயல் உபகரணங்களை பகிர்ந்தளித்தல்.**

**2011இல் நடத்தப்பட்ட வேறு நிகழ்ச்சித்திட்டங்கள்**

அரசாசார்பற்ற அமைப்புக்கள் மற்றும் அரச அமைபடபுக்களின் உதவியுடன் மாவட்ட அனர்த்த ஒருங்கிணைப்பு குழுவினால் நடத்தப்பட்டது. அம்பாறை, மொனராகலை மற்றும் கேகாலை மாவட்டங்களில் அனர்த்த முகாமைத்துவத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டன. இரத்தினபுரி மாவட்டத்தில் 6 இடங்களில் தீ அனர்த்தங்கள் தொடர்பாக அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களும் 19 இடங்களில் மண்சரிவு தொடர்பாக அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

**சர்வதேச ஒத்துழைப்பு தொடர்பான ஜப்பானிய முகவர் நிறுவனத்தினால் (ஜய்கா) உதவிகளின் கீழ் அனர்த்த முகாமைத்துவ சாத்திய மேம்பாட்டு கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.**

மாவட்ட முன் ஆயத்த திட்டமிடல் நடவடிக்கைகளை மதிப்பீடு செய்தல் மற்றும் திருத்துவதற்கு தேவையான ஒத்துழைப்பினை வழங்க அனர்த்த முகாமைத்துவ சாத்திய மேம்பாட்டு கருத்திட்டம் இணக்கப்பாட்டினை தெரிவித்துள்ளது. 2011இல் பின்வரும் பணிகள் நடைமுறைப்படுத்தப்படும்.

1. மாத்தறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் முன் ஆயத்த திட்டங்களை மதிப்பீடு செய்தல் (மாத்தளை, மட்டக்களப்பு)
2. மாவட்ட முன் ஆயத்த திட்டங்களை திருத்துதல் மற்றும் மீள் ஒழுங்கமைத்தல் (மாத்தளை, மட்டக்களப்பு)

## 6. அறிவூட்டல் பிரிவு

**அறிமுகம்**

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பங்களிப்பு மற்றும் அறிவூட்டும் பிரிவினால் உள்ளக பதவியணியினர், அனர்த்தத்துக்கு உள்ளாகக்கூடிய மக்கள், அரசமற்றும் அரச சார்பற்ற தரப்பினர் ஆகியோருக்கு பயிற்சியளிப்பு மற்றும் அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தல் தொடர்பான பொறுப்பினை ஏற்றுள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டங்களில் பெரும்பாலானவை அரசமற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் அனர்த்த முகாமைத்தவ நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## 6.1 சர்வதேச, சம்மேளனங்களின் கருத்தரங்கும் செயலமர்வுகளும்

### 6.1.1 அனர்த்தங்களை தணித்தல் தொடர்பான ஆசிய சம்மேளன கருத்தரங்கு

அனர்த்தங்களை தணித்தல் தொடர்பான ஆசிய சம்மேளனம், ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் 28 நாடுகளிலிருந்து வருகைதந்த 100 பிரதிநிதிகளினதும் 17 சர்வதேச அமைப்புக்களினதும் கலந்து கொள்ளலுடன் 2011 ஜுன் மாதம் 13ஆந் திகதி தொடக்கம் 15ஆந் திகதியளவிலான காலப்பகுதிக்குள் கொழும்பு சினமன் கார்டன் ஹோட்டலில் நடைபெற்றது. இலங்கை அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, அனர்த்தங்களை புரந்தள்ளு வதற்கான ஐக்கிய நாடுகளின் சர்வதேச மூலோபாயங்கள், மற்றும் ஜப்பான் நாட்டின் ஒத்துழைப்புடன் அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் அனர்த்தங்களை புறந்தள்ளு வதற்கான ஆசிய நிலையம் என்பன இணைந்து இந்த சம்மேளனத்தை ஒழுங்கு செய்துள்ளன. ஜப்பானிய அனர்த்த முகாமைத்துவ கௌரவ சிரேஷ்ட பிரதி அமைச்சரின் கலந்து கொள்ளலுடன் தலைமை அதிபதியான இலங்கை அனர்த்த முகாமைத்துவ கௌவர அமைச்சரின் கலந்து கொள்ளலுடன் இந்த சம்மேளனம் கோலாகளமாக ஆரம்பிக்கப்பட்டது. வெள்ளம், சுனாமி, காடுகளில் ஏற்படும் தீ, மண்சரிவு போன்ற அனர்த்த ஆபத்துக்களை முகாமைத்துவம் செய்வது தொடர்பான பிராந்திய அலுவலகங்கள் தொடர்பான இந்த சம்மேளனத்தில் கலந்துரையாடப்பட்டது. அனர்த்த முகாமைத்தவம் தொடர்பான பலதரப்பட்ட அணுகுமுறைகள் சம்பந்தமாக பிராந்திய நாடுகளின் அனுபவங்களை பகிர்ந்துகொள்வதற்கு இந்த சம்மேளனம் பெரிதும் வழிவகுத்தது.

### 6.1.2 சம்பவ கட்டளை அமைப்பு தொடர்பான பிராந்திய பயிற்சி செயலமர்வு

அனர்த்தங்கள் மற்றும் முன் ஆயத்தம் தொடர்பான ஆசிய மையம், பார்க் அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் பாதுகாப்பு சேவை என்பவற்றின் ஒத்துழைப்புடன் சம்பவ கட்டமைப்புத் தொடர்பான நான்கு நாள் பிராந்திய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் கொழும்பில் நடத்தப்பட்டது. அனர்த்த நிலைமைகளின்போது அந்த முறையை பயன்படுத்துவது தொடர்பான சார்க் அங்கத்துவ நாடுகள் கலந்து கொண்ட 20 பிரதிநிதிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டது. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் ஆரம்பத்தில் பயிற்றுவிக்கப்பட்ட முகாமையாளர்கள் சிலர் இந்த பயிற்சி நெறியை நடத்துவதற்கான வள பங்கீட்டாளர்களாக தமது பங்களிப்பினை வழங்கினார்கள். பிராந்தியத்தில் சம்பவ கட்டளை அமைப்பினை வழிநடத்தல் தொடர்பாக சார்க் நாடுகளில் இருந்து வருகைதந்த பிரதிநிதிகள் இலங்கைக்கு தமது நன்றியை தெரிவித்தனர்.

### 6.1.3 இலங்கைக்குள் நகர பலப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்தல்.

பாதுகாப்பான நகரமொன்றை உருவாக்கும் நோக்குடன் நகர பலப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான தேசிய நிகழ்ச்சி 2011 ஜூலை மாதம் 05ஆந் திகதி கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நடைபெற்றது. 03 மாநகர சபைகள், 20 நகர சபைகளின் தலைவர்கள், உள்ளூராட்சி, மாகாண சபைகள அமைச்சின் பிரதிநிதிகள் ஆகியோர் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டார்கள். 3 உள்ளூராட்சி அதிகாரப் பிரதேசங்கள் முன்மாதிரி நகரங்களாகவும், 12 நகரங்கள் சம பங்களிப்பு நகரங்களாகவும் தெரிவு செய்யப்பட்டன. முன்மாதிரி நகரமாக “சசகாவா” விருதினைப் பெற்றுள்ள பிலிப்பீனின் சென்பிரன்சிஸ்கோ நகரின் மேயர் தனது அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். நகரங்களில் ஏற்படும் அனர்த்தங்களை இல்லாமல் செய்தல் தொடர்பாக எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகளை மேலும் பலப்படுத்தும் வகையில் அதற்கான புதிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் இருக்கும் தொடர்புகளை மேலும் பலப்படுத்திக் கொள்வதற்கும் அதேபோன்று அது தொடர்பான சவால்கள் சம்பந்தமாக கலந்துரையாடுவதற்கு இந்த சந்தர்ப்பம் பெரும் வாய்ப்பாக அமைந்தது. அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் கௌரவ மஹிந்த அமரவீர பிரதான அதிதியாக கலந்து கொண்ட இந்த நிகழ்வில் அனர்த்த முகாமைத்துவ பிரதி அமைச்சர் கௌரவ துலிப் விஜேசேகரவும் கலந்து கொண்டார். அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு இணைந்து இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பித்தன. அனர்த்த ஒழிப்புக்கான ஐக்கிய நாடுகளின் சர்வதேச மூலோபாய (UNISDR) நிகழ்ச்சித் திட்டம், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (UNDP) அனர்த்த ஒழிப்புக்கான ஆசிய நிலையம் (ADPC) பிரக்டிகல் அக்ஷன் நிறுவனம், கொழும்பு மாநகர சபை, இலங்கை உள்ளூராட்சி நிறுவன சம்மேளனம் (FSLGA) ஆகியவற்றினால் இந்த மாநாட்டை ஒழுங்கு செய்வதற்கு அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஒத்துழைப்பு வழங்கியது.

## 6.2 தேசிய மட்டத்திலான பயிற்சித்திட்டங்கள்

### 6.2.1 அனர்த்த முகாமைத்துவ நிலைய பதவியணியினரின் திறன்களை வளர்த்தல்

அனர்த்த நிலைமைகளின்போது செயலாற்றுத்திறனுடன் பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ள கூடிய விதத்தில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பதவியணியினரின் ஆற்றலை மேம்படுத்துவதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் பல நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த பயிற்சித்திட்டங்களின் அடிப்படை

நோக்கம் தமக்குரிய மாவட்டங்களில் ஏற்படும் அனர்த்த நிலைமைகளுக்கு முன்னர், பின்னர் மற்றும் அவ்வாறான அனர்த்தங்களின்போது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடுவதாகும். குறிப்பிட்ட வருடத்தில் பின்வரும் பயிற்சி நெறிகள் நடத்தப்பட்டன.

- மாவட்ட முகாமைத்துவ உதவியாளர்களின் சாத்திய மேம்பாட்டுக்காக இரண்டு நாட்களுக்கான இரண்டு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. முதலாவது நிகழ்ச்சித்திட்டம் 2011 செப்டெம்பர் மாதம் 22 மற்றும் 23ஆந் திகதிகளிலும் இரண்டாவது நிகழ்ச்சித் திட்டம் 2011 ஒக்டோபர் மாதம் 6 மற்றும் 7ஆந் திகதியிலும் நடத்தப்பட்டது.
- அவசர நிலைமைகள் முகாமைத்துவம் செய்வதற்காக பெரும்பாலான நாடுகளினால் பயன்படுத்தப்படும் முகாமைத்தவ கருவியான சம்பவ கட்டளை கட்டமைப்பு தொடர்பான அறிவினைப் பெற்றுக்கொடுப்பதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உத்தியோகத்தர்களின் சாத்தியத்தன்மையை சம்பவ கட்டளை கட்டமைப்புடன் மேம்படுத்தப்பட உள்ளது. 2011 ஆகஸ்ட் மாதம் 02ஆந் திகதி தொடக்கம் 06ஆந் திகதிவரை கொழும்பு ஹெக்டர் கொப்பேகடுவ ஆராய்ச்சி நிலையத்தில் இதற்கான பயிற்சி நிகழ்ச்சி நடத்தப்பட்டது.
- புதிததாக சேர்த்துக்கொள்ளப்பட்ட உதவிப்பணிப்பாளர்கள் 14 பேருக்காக சாத்திய மேம்பாட்டினை ஏற்படுத்துவதற்காக அவர்களை அனர்த்த முகாமைத்துவ செயற்பாட்டினுள் உள்வாங்குவதற்கான சேவைக்கு முன்னரான பயிற்சி நிகழ்ச்சி 2011 நவம்பர் மாதம் 22 மற்றும் 23ஆந் திகதிகளில் நடத்தப்பட்டது.
- வெள்ளப்பெருக்கு, மண்சரிவுகளை தடுத்தல், அனர்த்தங்களின்போது பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளலுக்கான தொழில்நுட்ப பிரிவுகள் தொடர்பாக தமது சாத்தியத்தன்மையை மேம்படுத்திக் கொள்வதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையங்களின் பணிப்பாளர்களுக்கான பயிற்சித்திட்டங்கள் 2011 நவம்பர் மாதம் 27ஆந் திகதி தொடக்கம் 30ஆந் திகதி வரை ஜய்கா உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படுவதாக முகாமைத்துவம் மற்றும் சாத்திய மேம்பாட்டு கருத்திட்டத்தினால் நடத்தப்பட்டது.

### 6.2.2 பங்காளி நிறுவனங்களின் சாத்தியத் தன்மையை மேம்படுத்தல்

அனர்த்த முகாமைத்துவம் என்பது மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் அனர்த்தங்களின் போதான பதில் நடவடிக்கை நிறுவனங்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள், சமூகம் ஆகிய சகலர் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தும் விடயமாகும். எனவே குறிப்பிட்ட பங்காளி நிறுவனங்களுக்குரிய அனர்த்த முகாமைத்துவ சாத்தியத்தன்மையை மேம்படுத்து வதற்கு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள்

ஆரம்பிக்கப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் அனர்த்த முகாமைத்துவ நிலையமானது எந்தவோர் அனர்த்தத்தின்போதும் அதற்கு முகம்கொடுக்கக்கூடிய பலமான அனர்த்த முகாமைத்துவ கட்டமைப்பொன்றை உருவாக்குவதை இலக்காகக் கொண்டுள்ளது.

- வெள்ளப்பெருக்கு, வறட்சி மற்றும் வேறு அனர்த்தங்களுக்கு நாட்டின் வடக்கு பிரதேசம் அடிக்கடி உள்ளாகின்றது. எனவே, வதிவிடங்கள் மீது விசேட கவனத்தை செலுத்தி அரசினால் வட மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள துரித அபிவிருத்தி நடவடிக்கைகளை கருத்திற்கொண்டு அனர்த்தம் ஏற்படக்கூடிய வாய்ப்புள்ள பிரதேசங்களில் கட்டிடங்களை திட்டமிடல் மற்றும் நிர்மாணப் பணிகள் தொடர்பாக தயாரிக்கப்பட்டுள்ள வழிகாட்டல்களை பயன்படுத்தி அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக வடமாகாணத்தில் பணிபுரியும் தொழில்நுட்பத்துறை சார்ந்த உத்தியோகத்தர்கள் 122 பேருக்கு (பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்) இரண்டு நாள் பயிற்சிநெறியொன்று ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியத்துடன் இணைந்து அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டது. இதற்கு மேலதிகமாக வடமாகாணத்தில் பணியாற்றும் திட்டமிடல் உத்தியோகத்தர்கள் 41 பேருக்கு புவிவியல் கட்டமைப்பு (GIS) மற்றும் ஒருங்கிணைந்த செயற்பாட்டு சூழல் மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் (ISEA) கீழ் தயாரிக்கப்பட்ட வரைபடங்களை பயன்படுத்தல் தொடர்பான 6 நாள் பயிற்சி பாடநெறி ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தின் உதவியுடன் நடத்தப்பட்டது.

  விசேடமாக அவசர நிலைமையின் போது அனர்த்த முன்னெச்சரிக்கை தொடர்பாடல் முறை மற்றும் உடனடிப் பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் தொடர்பான பணிகளில் பொலிஸ் உத்தியோகத்தர்களும் முக்கிய பங்களிப்பு வழங்கி வருகின்றனர். எனவே தலைமை பொலிஸ் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸ் பரிசோதகர்கள் 50 பேருக்கு அவசர நிலைமைகளின்போதான பதில் நடவடிக்கைகள் சம்பந்தமாக அவர்களது சாத்தியத்தன்மையை வளர்ப்பதற்காக நான்கு நாள் பயிற்சித்திட்டமொன்று களுத்துறை பொலிஸ் பயிற்சி நிலையத்தில் 2011 ஆகஸ்ட் மாதம் 08 ஆந் திகதி தொடக்கம் 12ஆந் திகதி வரை நடத்தப்பட்டது.

### 6.2.3 மாவட்ட அடிப்படையிலான பயிற்சி மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்

மாவட்ட அடிப்படையில் பங்காளிகளின் சாத்தியத்தன்மையை மேம்படுத்துவதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பயிற்சி பிரிவினால் தேவையான நிதி ஒதுக்கம்

செய்யப்பட்டுள்ளது. மாவட்ட முகாமைத்துவ அனர்த்த முகாமைத்துவ பிரிவுகளினால் தமக்குரிய மாவட்டங்களுள் சமூக முன் ஆயத்த பணிகளை முன்னெடுப்பதற்காக பின்வரும் நிகழ்ச்சத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

- இரத்தினபுரி மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் அனர்த்த நிலைமை பதில் நடவடிக்கைகளில் ஈடுபடும் பொலிசார், கடற்படையினர், விமானப்படைகள், தரைப்படையினர் 150 பேருக்கு அவர்களது சாத்தியத்தன்மையை வளர்ப்பதற்கான பயிற்சிநெறிகள் நடத்தப்பட்டன.
- மாத்தளை, பொலன்னறுவை, கண்டி, பதுளை மாவட்டங்களில் அனர்த்த முகாமைத்துவத் திட்டங்களை தீட்டுதல், அனர்த்தங்களை எதிர்நோக்கியுள்ள சமூகத்தினரின் சாத்தியத்தன்மையை மேம்படுத்தல், அவசர நிலைமையின் போது மக்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல், நிவாரணங்களை பகிர்ந்தளித்தல், அவ்வாறான பணிகளுக்கு உதவுதல், வழங்குதல் போன்ற பணிகளில் ஈடுபடும் அரச உத்தியோகத்தர்களுள் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவினருக்கு சாத்திய மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டன.
- கேகாலை, புத்தளம், குருநாகல், காலி மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்காக கல்வி அமைச்சினால் ஜேர்மன் சர்வதேச நிறுவனத்தின் உதவியுடன் தயாரிக்கப்பட்ட வழிகாட்டலினை அடிப்படையாகக் கொண்ட பாடசாலை பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமான பயிற்சிகளை வழங்குவதற்கான பயிற்சி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

## 7. அவசர நிலைமை கருமமாற்றல் பிரிவு

### 7.1 அறிமுகம்

பாதுகாப்பு படையினர், பொலிசார் உட்பட சகல தரப்பு நிறுவனங்களின் உதவியுடன் தொழில்நுட்ப நிறுவனங்களின் உதவியுடன் அனர்த்த முன்னெச்சரிக்கை தகவல்களைப் பெறுதல், அனர்த்தங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளல், நிலைமைகள் தொடர்பான அறிக்கைகள் தயாரித்தல் மற்றும் தகுந்த நடவடிக்கைகள் எடுத்தல் என்பவற்றுக்காக நாட்டில் மனிதர்களினால் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்கள் மற்றும் இயற்கை அனாத்தங்கள் என்பவற்றை மேற்பார்வை செய்தல் தொடர்பான அவசர நிலைமைகளின் போதான பணிகளை ஒருங்கிணைக்கும் பொறுப்பு அவசர நிலைமை கருமமாற்றல் பிரிவுக்குரியதாகும். 2011ஆம் ஆண்டில் இடம்பெற்ற மீள் ஒழுங்கமைப்பு

செயற்பாட்டினுள் அவசர நிலைமைகள் கருமமாற்றல் பிரிவு முன்னெச்சரிக்கை பிரிவுடன் ஒருங்கிணைக்கப்பட்டது.

## 7.2 அவசர நிலைமைகள் கருமமாற்றல் பிரிவு

அவசர நிலைமைகள் கருமமாற்றல் பிரிவு 2006ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன் அது வார நாட்களில் 24 மணித்தியாலங்கள் பூராகவும் செயற்படும். பொதுவான நேரங்களில் அவசர நிலைமை கருமமாற்றும் நிலையம் 8 மணித்தியாலய கடமை மாற்றுமுறை அடிப்படையில் இயங்குவதுடன் இது உதவிப் பணிப்பாளர் ஒருவர் மற்றும் முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்களில் இருவர் ஊடாக செயற்படுகின்றது. அனர்த்த நிலைமைகளின் போது இந்த நிலையத்தை இயங்கவைப்பதற்காக சகல பதவியணியினரும் கடமையில் ஈடுபடுத்தப்படுவதுடன் அவசர நிலைமைகளின் போதான கருமமாற்றும் பிரிவுக்காக நிலையான கருமமாற்றல் செயற்பாட்டு விதிமுறையொன்று தயாரித்து அனர்த்த நிலைமைகளின் போது தன்னால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் தொடர்பாக அதன் பணியாளர்கள் அறிவூட்டப்படுகின்றனர்.

நாடு முழுவதிலும் மனிதர்களினால் ஏற்படுத்தப்படும் மற்றும் இயற்கையாக இடம்பெறும் சகல அனர்த்த நிலைமைகளின் போது அது தொடர்பான தகவல்களை திரட்டுதல் மற்றும் தரவு அறிக்கைகளை தயாரித்தல் அவற்றை மேன்மைதங்கிய ஜனாதிபதியின் செயலாளர், அமைச்சரின் செயலாளர், அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் மற்றும் சகல ஊடக நிறுவனங்களுக்கும் வழங்கும் பணியை அனர்த்த முகாமைத்துவ நிலையம் மேற்கொள்கின்றது. அனர்த்தங்களின்போது அதன் பாரதூரமான நிலைமைகளின் அடிப்படையில் நாளொன்றுக்கு இரண்டு நாட்கள் அல்லது மூன்று தடவைகள் நிலைமை அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன.

இயற்கையாக இடம்பெற்ற அல்லது மனிதர்களினால் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்களின் போது அவசர நிலைமை கருமமாற்றல் பிரிவினால் ஆட்களை மீட்பதற்கான பணிகளை ஒருங்கிணைத்தல், விபத்துக்குள்ளான மக்களை விரைவாக பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லுதல், அவர்களுக்கான நிவாரணங்களை வழங்குதல் பணிகளில் முப்படையினர், பொலிசார், செஞ்சிலுவை அமைப்பு, ஐக்கிய நாடுகளின் நிறுவனங்கள் மற்றும் வேறு பங்காளி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் வளங்கள் மற்றும் அவசரகால நிலைமை நிவாரணங்களை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. அவசரகால கருமமாற்றல் நிலையம் தற்போது சிறு எண்ணிக்கையிலான பதவியணியினருடன் இயங்கிவருவதுடன் மேலதிக பணியாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதன் பின்னர் இதன் பணிகள் மேம்படுத்தப்பட உள்ளன.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியம் (UNDP), ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (UNICEF) அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் (UNCHR), உலக உணவு நிகழ்ச்சித் திட்டம் (WFP) மனிதாபிமான நடவடிக்கைகளை ஒழுங்கமைப்பதற்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகம் (UNOCHA), செஞ்சிலுவைச் சங்கம் (Red Cross), ஐ.ஓ.எம் (IOM), நிவாரணங்களுக்கான ஐக்கிய மொதடிஸ்குழு (UNCOR) வேர்ல்ட்விஷன் ஆகிய நிறுவனங்களினால் அனர்த்த நிலைமைகளின்போது விரைவான பதில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான தொடர்ச்சியான அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு உதவி வருகின்றது.



**அவசரகால கருமமாற்றல் நிலையம் செயற்படுதல்**

## 7.3 அவசர நிலைமைகளின்போது கருமமாற்றல் நடவடிக்கைகளுக்காக வளங்களை வழங்குதல்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்படும் பிரதேசங்களுக்கு 10 மோட்டார் படகுகளும், 11 சங்கிலி அரிவாள்களும் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் பம்புகள் மற்றும் நீர் சுத்திகரிக்கும் உபகரணங்கள் என்பன மாவட்டங்களுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்பட்டன. ஆரம்ப நடவடிக்கையாக அனர்த்த முகாமைத்துவ நிதியத்தினால் வெள்ளப்பெருக்கு அபாயம் உள்ள பிரதேசங்களில் 39 படகுகள் வழங்கப்பட்டுள்ளதுடன் 2011இல் 5 மோட்டார் படகுகள், டோரில் பொருத்தப்பட்ட 02 படகுகள், 20 சங்கிலி அரிவாள்கள், 05 நீர் பம்புகள், 04 உழவு இயந்திரங்கள் என்பவற்றை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

## 7.4 அவசர நிலைமைகளின் போதான பதில் நடவடிக்கைகள்

### 7.4.1 வெள்ளப்பெருக்கு

2011ஆம் ஆண்டு ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் பிரதானமாக 2 வெள்ளப்பெருக்குகள் இடம்பெற்றன. ஜனவரி மாதத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் திருகோணமலை, அநுராதபுரம், பொலன்னறுவை, வவுனியா, நுவரெலியா, அம்பாறை, புத்தளம், மன்னார், மொனராகலை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் 2,94,092 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. 5432 வீடுகள் முற்றாக அழிந்ததுடன் அந்த வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட

காலத்தில் 44 பேர் உயிரிழந்ததுடன் இதில் 18 மரணங்கள் மாத்திரமே வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்டது. ஏனையோர் வெள்ளப்பெருக்கினை பார்வையிட வந்தோரே இவ்வாறு உயிரிழந்தனர்.




மட்டக்களப்பு மாநகரசபை பிரதேசம்
நீரில் மூழ்கிய நிலையில்




முழுமையாக சேதமடைந்த வீடுகள்




இலங்கை இராணுவத்தினர்
திருகோணமலையில் மீட்பு பணிகளில்

2011ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் திருகோணமலை, அநுராதபுரம், பொலன்னறுவை, மொனராகலை, வவுனியா, அம்பாறை, புத்தளம், குருநாகல், மன்னார், மட்டக்களப்பு, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் 372,576 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. 2492 வீடுகள் முற்றாக சேதமடைந்ததுடன் 18 பேர் உயிரிழந்தனர். இதில் 11 பேர் வெள்ளப்பெருக்கை பார்வையிடுவதற்கு வெளிமாவட்டங்களிலிருந்து வந்தவர்களாகும்.

அநுராதபுரம் மாவட்டத்தில் நாச்சதூவ வாவி
பெருக்கெடுத்தல்



மனித உயிர்களை பாதுகாக்கும் நோக்குடன் அவசர நிலைமைகளின் போதான கருமமாற்றும் பிரிவினால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட பிரதேசங்களுக்கு பிரவேசிக்க வேண்டாம் என அடிக்கடி ஊடகங்கள் மூலம் மக்களுக்கு அறிவித்தல்களை வழங்கி வருகின்றது.

பிரதான அணைக்கட்டுக்கள் உடைப்பெடுப்பதை தடுப்பதற்காக நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் 24 மணித்தியாலங்கள் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் நிலவும் நிலைமைகள் தொடர்பாக அவசர நிலைமைகள் கருமமாற்றும் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டு வந்தது. சகல பிரதான நீர்த்தேக்கங்களும் பெருக்கொடுத்ததுடன் அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் காணப்பட்ட பிரதான நீர்த்தேக்கங்களின் அணைக்கட்டுக்கள் உடைவதை தடுப்பதற்காக மேலதிக நீர் வெளியேறும் கதவுகளை திறக்க நேர்ந்தது. இதனால் அநுராதபுர நகரிலும் பொலன்னறுவை மாவட்டத்திலும் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. மெதிரிகிரிய நகரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களின் சில இடங்கள் பல நாட்களாக நீரில் மூழ்கியிருந்ததுடன் கடற்படையினரும் விமானப்படையினரும் காயமடைந்தவர்களை பிரதேசத்திலிருந்து வெளியேற்றியதுடன் அவர்களுக்கான அத்தியாவசிய பொருட்கள் மற்றும் உணவு என்பனவும் வழங்கப்பட்டன.

மீட்பு பணிகளை மேற்கொள்வதற்காக அவசரகால கருமமாற்றும் பிரிவு அமைச்சுடன் இணைந்து பணிகளை மேற்கொண்டது. விமானப்படையினர், கடற்படையினர், தரைப்படையினர் வெள்ளப்பெருக்கில் சிக்குண்டு மரங்களின் மீதும் கூரைகளின் மீதும் இருந்த சுமார் 700 பேரைக் காப்பாற்றினார்கள், கடற்படையினர் 19 படகுகளில் மீட்பு பணிகளில் ஈடுபட்டனர். அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் மாத்தறை, காலி, களுத்துறை, இரத்தினபுரி, கம்பஹ, கொழும்பு ஆகிய பிரதேசங்களிலிருந்து அவசரகால பணிகள், ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் என்பவற்றுக்காக மாவட்ட நிர்வாகத்துக்கு உதவும் பொருட்டு பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

### 7.4.2 மண்சரிவுகள்

கடும் மழை காரணமாக மாத்தளை, கண்டி, பதுளை, கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் மண்சரிவுகள் ஏற்பட்டதுடன் இதனால் பலர் இடம்பெயர்ந்ததுடன் வீடுகளும் சேதமடைந்தன. மாவட்ட அனர்த்த பிரிவுகளுக்கு பொலிசார் மற்றும் அரச உத்தியோகத்தர்களின் உதவியுடன் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்து

செல்வதற்கும சமைத்த உணவு மற்றும் நிவாரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

மாத்தளை மாவட்டத்தில் இரத்தோட்டை பிரதேசத்தில் மண்சரிவுகளினால் முற்றாக சேதமடைந்த வீடுகள்



### 7.4.3 நகர்ப்புறங்களிலும் காடுகளிலும் ஏற்படும் தீ

மீளாய்வு ஆண்டில் 8 சந்தர்ப்பங்களில் நகரங்களிலும் 11 சந்தர்ப்பங்களில் காடுகளிலும் தீ விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. அவசர அனர்த்த நிலைமை கருமமாற்றல் பிரிவினால் விமானப்படையினரின் உதவியுடன் இந்த தீ அணைக்கப்பட்டன. நுவரெலியா மாவட்டத்தில் ஏற்பட்ட தீயை அனைப்பதற்காக இரண்டு தடவைகளிலும், மாத்தளை மாவட்டத்தில் ஏற்பட்ட தீயை அணைப்பதற்காக ஒரு தடவையும் விமானப்படையினரின் ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தப்பட்டன. ஹந்தானையில் ஏற்பட்ட தீயினை அணைப்பதற்காக 350 இராணுவத்தினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர். இதற்கு மேலதிகமாக முன் ஆயத்த நடவடிக்கையாக 6 மாவட்டங்களில் 5 குழுக்களுக்கும் 2 பாடசாலைகளுக்கும் 200 தீயணைப்பு உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. காடுகளில் தீ விபத்துக்கள் ஏற்படும்போது அந்த தீ ஏற்பட்ட இடங்கள் தொடர்பாக தகவல்களை விமானப்படையினர் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அதற்கான உபகரணங்களும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

### 7.4.4 கடும் காற்று நிலைமை

2011ஆம் ஆண்டில் கடும் காற்று தொடர்பாக 14 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. 2011 நவம்பர் மாதம் 25ஆந் திகதி காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் கடும் காற்று வீசியதுடன் இதன்காரணமாக 23 பேர் இறந்துள்ளனர் மேலும் 11 பேர் காணாமல் போயுள்ளனர். வெலிகம மற்றும் மாத்தறையில் மீனவர்களுக்கு பெரும் சேதங்கள் ஏற்பட்டன. அவசரகால நிலைமை கருமமாற்றும் நிலையம் குறிப்பிட்ட

மாவட்டங்களின் அனர்த்த ஒருங்கிணைப்பு குழுக்களுடன் சேர்ந்து பாதிக்கப்பட்டவர்கள் காப்பாற்றப்பட்டு தேவையான நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 7.5 அனர்த்தங்கள் தொடர்பாக முன்னெச்சரிக்கை தகவல் பரிமாற்றல் மற்றும் தொடர்பாடல்

இடம்பெற போகும் இயற்கை அனர்த்தங்கள் தொடர்பாக ஆபத்துக்கள் தொடர்பாக முன்னெச்சரிக்கை விடுப்பதற்காக அதிகாரம் வழங்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனங்களிடமிருந்து அவசர நிலைமை கருமமாற்றல் நிலையத்தினால் அனர்த்த முன்னெச்சரிக்கை தொடர்பான தகவல்கள் கிடைக்கின்றன. அவசர நிலைமை கருமமாற்றல் பிரிவினால் இந்த தகவல்கள் ஆபத்துக்களை எதிர்நோக்கக்கூடிய மக்களுக்கு வழங்கப்படுகின்றன. அவசர நிலைமைகளுக்கான நிலையத்தினால் குறிப்பிட்ட தொழில்நுட்ப நிறுவனங்கள், தரப்பினர், உள்ளூராட்சி நிறுவனங்கள், ஊடகங்கள், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுக்களின் உறுப்பினர்கள் மீண்டும் இணைந்து அந்த நிலைமையை தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்படுவதுடன் அவசரகால கருமமாற்றல் மற்றும் நிவாரணங்களை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளும் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் தொடர்பாடல் கட்டமைப்புக்கள் தொடர்ச்சியாக அபிவிருத்தி செய்யப்படுவதுடன் அனர்த்த முன்னெச்சரிக்கை கட்டமைப்புக்களின் செயற்பாடுகளின் வினைத்திறன் தொடர்பாக தொடர்ச்சியாக பரிசீலிக்கப்படுகின்றது.

வட மாகாணத்தில் அனர்த்த முன்னெச்சரிக்கை தகவல் பரிமாற்றலுக்கான ஆற்றலை மேம்படுத்துவதற்காக கையடக்க 10 VHF வானொலி இயந்திரங்களும் ஓர் நிலையமும் யாழ்ப்பாணத்துக்கு வழங்கப்பட்டது.








**செய்மதி தொலைபேசி மற்றும் VHF வானொலி நிலையம்**

**திருகோணமலை மாவட்டத்தில் அனர்த்த முன்னெச்சரிக்கை நிலையம்**

அனர்த்த முகாமைத்துவ தொடர்பாடல் மற்றும் பதில் நடவடிக்கைகளுக்கான ஆற்றல் அபிவிருத்தி திட்டத்தின் இரண்டாவது கட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்ட 25 முன்னெச்சரிக்கை கோபுரங்களில் 09 2011இல் மக்கள் சேவைக்காக ஒப்படைக்கப்பட்டது. சுனாமி, சூறாவளி மற்றும் வேறு அனர்த்தங்கள் தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கரையோரப் பிரதேசங்களில் இதுவரை 74 கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

50 அனர்த்த முன்னெச்சரிக்கை வானொலி தொடர்பாடல் மூலம் ஒலி தொடர்பாடல் கருவி வசதிகள் 2011 செப்டெம்பர் மாதம் 06ஆந் திகதி வெற்றிகரமாக பரீட்சித்துப் பார்க்கப்பட்டன. மேலும் 2011இல் சைரன்களுடன் கூடிய 400 மெகா போன்களும் 30 மின்சார போன்களும் 45 கையால் இயக்கும் சைரன்களும், அனர்த்த ஆபத்துக்களை எதிர்நோக்கும் மக்களை கீழ்மடடத்திலிருந்து பலப்படுத்துவதற்காக வழங்கப்பட்டன. கிராமமட்டத்தில் தகவல்களை பகிர்வதற்கான நடவடிக்கைகளில் மெகாபோன் மிகவும் பயனுள்ளதென தெரிந்துள்ளது..



கையினால் இயக்கும் சைரன்



மெகா போன்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் மண்சரிவுகள் ஏற்படக்கூடிய மழைவீழ்ச்சியை வெளிப்படுத்தும் மழைவீழ்ச்சி அளவீட்டுக்கருவிகளை அனர்த்தங்களை எதிர்நோக்கும் சமூகத்தினருக்காக வழங்கப்பட்டது. மண்சரிவுகள் ஏற்படக்கூடிய பிரதேசங்கள் தொடக்கம் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதற்கான தீர்மானத்தை எடுப்பதற்கு இந்த அளவீட்டுக் கருவிகள் மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளன. மாத்தளை, நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி, கேகாலை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் மண்சரிவு ஏற்படக்கூடிய

பிரதேசங்களில் வாழும் மக்களுக்கிடையில் பகிர்ந்தளிப்பதற்காக 2011 இல் 1000 மழை அளவீட்டுக் கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டன.

## 7.6 அனர்த்தங்களின்போது மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்வதற்கான ஒத்திகைகள்

சுனாமி அனர்த்தத்தின்போது மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லல் தொடர்பாக தேசிய மட்டத்திலான 2 ஒத்திகை நிகழ்ச்சித்திட்டங்கள் முறையே 2011 மார்ச் மாதம் 31ஆந் திகதி மற்றும் டிசெம்பர் 20ஆந் திகதி நடத்தப்பட்டது. சுனாமி ஆபத்துள்ள மாவட்டங்களில் மாவட்டமொன்றுக்கு ஓர் கிராமம் வீதம் நடத்தப்பட்ட இந்த ஒத்திகைகளின்போது பாதுகாப்பான இடங்களுக்கு அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். சுனாமி அனர்த்தங்கள் ஏற்படக்கூடிய மாவட்டங்களில் ஒத்திகை நிகழ்ச்சிகள் திரைச்சேரி நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டன.





**யாழ்பாண மாவட்டத்தில் சுனாமி ஒத்திகை**

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் இந்த தேசிய மட்டத்திலான ஒத்திகைகள் அனர்த்த முன்னெச்சரிக்கை கட்டமைப்பினை மேலும் விருத்தி செய்யும்போது மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை இனங்காணுவதற்காக மேற்கொள்ளப்படுகின்றன. மாவட்ட அடிப்படையில் மேலும் ஒத்திகை நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. இதற்கான பணம் திறைசேரியினால் ஒதுக்கப்பட்டன.

மண்சரிவு ஏற்படும்போது மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்து செல்லல் தொடர்பாக தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்று அனர்த்த முகாமைத்துவ மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஜெய்கா (JICA) நிறுவனத்தின் உதவியுடன் நுவரெலியா, பதுளை, மற்றும் கேகாலை மாவட்டங்களில் நடத்தப்பட்டது. பாதுகாப்பான பாதைகள், பாதுகாப்பான இடங்கள், கிராம மக்களினால் இனங்காணப்பட்டதுடன் 400க்கும் அதிகமான மக்கள் இந்த ஒத்திகைகளில் கலந்து கொண்டனர்.

## 7.7 பாதுகாப்பான இடங்களுக்கு மக்களை அழைத்துச் செல்வதற்காகவும் மீட்பு பணிகளுக்காகவும் இராணுவத்தினரின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ளல்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் வேண்டுகோளுக்கமைய இராணுவ முகாம்களை அண்மித்து வாழும் மக்களுக்கு சுனாமி முன்னெச்சரிக்கை தகவல்களை வழங்குவதற்கும் சுனாமி ஆபத்துக்களை எதிர்நோக்கியுள்ள பிரதேசங்களில் அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்ல இலங்கை இராணுவம் இணக்கம் தெரிவித்துள்ளது. இராணுவத்தினர் மிகவும் விரிவான சுனாமி அனர்த்த முன்னெச்சரிக்கை விடுத்தல் மற்றும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லல் தொடர்பான திட்டமொன்று தயாரிக்கப்பட்டது.

அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் பாதுகாப்பு அமைச்சின் கட்டளைக்கமைய நாட்டின் 25 மாவட்டங்களில் தேடுதல் மற்றும் மீட்பு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

தேடுதல் மற்றும் மீட்பு குழுக்களுக்காக இராணுவத்தினரால் கேட்கப்பட்ட உபகரணங்களின் ஒரு தொகுதியை கொள்வனவு செய்வதற்காக தேவையான பணம் வழங்கப்பட்டது. அனர்த்த முகாமைத்துவ நிலையம் அமைச்சின் உதவியுடன் தேடுதல் மற்றும் மீட்பு குழுக்களை பயிற்றுவிப்பதற்காக அதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டு வருகின்றது.

## 7.8 அனர்த்த தகவல் தரவுகள் (டெஸ்இன்வென்டர்)

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் டெஸ்இன்வென்டர் என்ற பெயரில் இணையத்தளங்களை அடிப்படையாகக் கொண்ட அனர்த்த தகவல் தரவு கட்டமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளது. இதற்காக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியம் உதவியது. 1973ஆம் ஆண்டு தொடக்கம் இடம்பெற்ற அனர்த்தங்கள் தொடர்பான தகவல்கள் இந்த தரவுக் கட்டமைப்பில் இருக்கின்றது. இதனை காலத்துக்கேற்ப ஒழுங்குபடுத்தும் கடமை 2010 தொடக்கம் அவசரகால நிலைமைகள் கருமமாற்றல் பிரிவினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. 2011 டிசெம்பர் மாதம் 31ஆந் திகதி வரை இடம்பெற்ற அனைத்து அனர்த்தங்கள் தொடர்பான தரவுகளும் இதில் அடங்குகின்றன.

## 7.9 இலங்கை அனர்த்த வள கட்டமைப்பு (SLDRN)

மாவட்ட அடிப்படையிலிருக்கும் வளங்கள் தொடர்பாக தகவல்கள் சேகரிக்கப்பட்டு இலங்கை அனர்த்த வள கட்டமைப்புக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த கட்டமைப்பு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியத்தின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தரவுகள் அடிப்படையில் பல விடயங்கள் தொடர்பாக தகவல்கள் இருப்பதுடன் தரவுகள் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் அதன் செல்லுபடாத் தன்மையை பரிசிலிப்பது மிகவும் கடினமான காரணம் என்பதை அனர்த்த முகாமைத்துவ நிலையம் உணர்ந்துள்ளது. மாவட்ட அடிப்படையில் இருக்க வேண்டிய ஆகக்குறைந்த பட்ச விடயங்களின் எண்ணிக்கையை இனங்காணுவதற்கும் அவற்றை முறைப்படுத்து வதற்கும் தேவையான பொறிமுறையொன்றை இனங்காணுவதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் பொறுப்புவாய்ந்த நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## 7.10 இணையத்தளம்

அனர்த்த முகாமைத்தவ நிலையத்தின் இணையத்தளம் மீள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது www.dmc.gov.lk ஊடாக சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தேவையான தகவல்களைப் பெறலாம். இதில் உள்ளடங்கும் தகவல்களை முறைப்படுத்தல் மற்றும் அதன் மூலம் புதிய தகவல்களை வழங்கக்கூடிய தன்மை என்பவற்றினால் இந்த இணையத்தளம் பெரிதும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. இந்த இணையத்தளத்தை மீள் நிர்மாணிப்பதற்காக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியம் நிதி உதவியினை வழங்கியுள்ளது.

**அனர்த்த முகாமைத்தவ நிலையம்**

**2011 டிசெம்பர் 31ஆந் திகதி முவடிவடைந்த வருடத்துக்கான நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | 2011<br>ரூ. ச. | 2010<br>ரூ. ச. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நிலையான சொத்துக்கள்** | | | |
| ஆதனங்கள், உதிரிப்பாகங்கள், உபகரணங்கள் | **05** | **432,018,709.18** | 389,105,005.70 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| தொடரும் வேலைகள் | **06** | **1,153,375,534.22** | 1,153,375,534.22 |
| அனர்த்த எச்சரிக்கை பொருட்கள் கையிருப்பு | **07** | **28,507,482.40** | 11,230,122.00 |
| பொருட்பதிவேடு - எழுதுகருவிகள் | **08** | **405,816.04** | 947,343.37 |
| முன்செலுத்தலும் முற்பணங்களும் | **09** | **3,183,875.82** | 2,701,347.63 |
| வர்த்தக மற்றும் ஏனைய கிடைப்பனவு | **10** | **1,698,323.61** | 1,426,205.25 |
| காசும் காசுக்கு சமமானவையும் | **11** | **292,951.68** | 16,104,906.88 |
| **குறிப்பு -17- ஏனைய ஏற்பாடுகள்** | **ரூபா சதம்** | **ரூபா சதம்** |
|---|---|---|
| கையிருப்பு காணாமல் போதல் தொடர்பான ஒதுக்கம் | **206,011.56** | 206,011.56 |
| | **206,011.56** | 206,011.56 |

2007 ஜுன் மாதம் 7ஆந் திகதி வெயான்கொடை அ.மு.நி. களஞ்சியத்திலிருந்து 206011.56 ரூபா பெறுமதியான அனர்த்தங்கள் முன்னெச்சரிக்கை உபகரணங்கள் காணாமல் போயுள்ளன. இந்த காணாமல் போதல் சம்பவத்துடன் தொடர்புபட்ட

| **குறிப்பு -18- திரண்ட செலவினம்** | **ரூபா சதம்** | **ரூபா சதம்** |
|---|---|---|
| ஆட்சம்பளம் | **-** | 17,250.00 |
| மேலதிக நேர கொடுப்பனவு | **71,151.38** | 51,969.96 |
| பயணம் - உள்ளூர் | **66,560.50** | 122,706.42 |
| எழுது கருவிகளும் அலுவலக உபகரணங்களும் | **138,476.90** | - |
| கொடுப்பனவுகள் | **-** | 912.00 |
| எரிபொருள் | **321,320.48** | 75,605.00 |
| வாகன பராமரிப்பு | **1,545,793.23** | - |
| இயந்திரங்கள், உபகரணங்கள் பராமரிப்பு | **68,024.24** | - |
| வாடகை மற்றும் உள்ளூர் வரிகள் | **31,250.00** | 12,250.00 |
| தபால் தொலைத்தொடர்புகள் | **244,372.07** | 352,462.26 |
| மின்சாரம் நீர் | **244,466.66** | 16,178.31 |
| ஏனைய சேவைகள் | **517,384.50** | 25,655.84 |
| கணக்காய்வு கட்டணங்கள் | **-** | 400,000.00 |
| | **3,248,799.96** | 1,074,989.79 |

මගේ අංකය / எனதுஇல / My No. டீஈ/ஜீ/டீஎம்சீ/எப்ஏ/2011

ඔබේ අංකය / உமது இல / Your No.

දිනය / திகதி / Date 2012 திசெம்பர் 11

பணிப்பாளர் நாயகம்,
அனர்த்த முகாமைத்துவ நிலையம்

**அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளபடியான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்தங்கள் முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிலையத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு விரிவான அறிக்கை 2012 செப்தெம்பர் 26 ஆந் திகதி நிலையத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone. 2887028 - 34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. oaggov@sltnet.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிலையத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற்கொள்கின்றாரேயன்றி நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தாபிப்பு மற்றும் அதன் கருமங்கள்

2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்தங்கள் முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் 8 (1) ஆம் பிரிவின் பிரகாரம் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினை தாபிப்பதற்கு அதிகாரம் கிடைத்திருந்ததுடன் அந்நிலையத்தின் கருமங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் மற்றும் தேசிய அவசர நிலமைகள் செயற்பாட்டுத் திட்டத்தினை தயாரிப்பதற்கு உதவுதல்.

(ஆ) ஏனைய நிறுவனங்களில் இடம்பெறுகின்ற அனர்த்த முகாமைத்துவ திட்டங்களிற்காக நிதி உதவிகளை வழங்குதல் மற்றும் கண்காணித்தல்.

(இ) அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்பில் ஏனைய நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களுடன் ஒருங்கிணைப்பினை பேணுதல் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்.

(ஈ) அனர்த்த முகாமைத்துவத்துடன் தொடர்புடைய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான தரவுகளை சேகரித்தல் மற்றும் பேணிவருதல்.

(உ) நிலையத்தின் நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கைகளை அவ்வப்போது பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்.

மேற்படி கருமங்கள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்குப் பொறுப்பளிக்கப்பட்டிருந்த போதிலும் அக்கருமங்கள் நிறைவேற்றப்பட்டமையை உறுதிப்படுத்தும் தகவல்கள் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக

ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு நெதர்லந்து கடன் உதவியின் கீழ் வழங்கப்பட்டிருந்த சுனாமி சமிக்ஞை கோபுரங்கள் மற்றும் கெப் வாகனத்திற்காக கணிக்கப்பட்ட பெறுமானத்தேய்வுகள் தொடர்புடைய மானியக் கணக்குடன் மீளாய்வாண்டு வரை சீராக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் அச்சீராக்கத்தினை மானியக் கணக்குகளில் பதிவு செய்கையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) சுனாமி சமிக்ஞை கோபுரங்களிற்காக 2008 முதல் 2010 ஆம் ஆண்டு வரை பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 103,487 ஆல் அதிகரித்துக் கணக்குகளில் சீராக்கப்பட்டிருந்தது.

(ii) கெப் வாகனத்திற்காக 2009 மற்றும் 2010 ஆகிய 02 ஆண்டுகளிற்கான பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 29,151,159 ஆல் குறைத்துக் கணக்குகளில் சீராக்கப்பட்டிருந்தது.

மேற்படி நிலமை காரணமாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் முகாமைத்துவ தொடர்பாடல் செயற்திட்டக் கணக்கு மற்றும் திரண்ட மிகை என்பன ரூபா 29,047,672 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) நெதர்லந்து கடன் உதவித்திட்டத்தின் கீழ் ரூபா 57.3 மில்லியன் பெறுமதியான சுனாமி சமிக்ஞை கோபுரங்கள் 2011 ஆம் ஆண்டில் தெரிவுசெய்யப்பட்ட கரையோரப் பிரதேசங்களில் தாபிக்கப்பட்டிருந்த போதிலும் இப்பெறுமதி நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள் கணக்கு மற்றும் கடன் மானியக் கணக்கின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கணனிகள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களிலும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலும் உள்ள பெறுமதிகளிற்கிடையே ரூபா 1,366,423 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இவ்வேறுபாட்டினை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அனர்த்த முகாமைத்துவ தொடர்பாடல் மற்றும் எதிர்கொள்ளல் இயலளவு முன்னேற்றச் செயற்திட்டம் (ICET) இன் கீழ் 2008 முதல் 2011 ஆம் ஆண்டு வரை அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்த கடன் உதவி உபகரணங்களின் பெறுமதி ரூபா 1,641,746,056 ஆனதுடன் அதன் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 1,675,102,159 ஆகும். இந்த வேறுபாடான ரூபா 33,356,103 இனை இனங்கண்டு தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் கணக்கு விடயங்களை அவற்றின் எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் இன்மை காரணமாக கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தன.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| முகாமைத்துவ தொடர்பாடல் செயற்திட்டம் | | செயற்திட்ட உடன்படிக்கை, செயற்திட்டப் பெறுமதி |
| i. கடன் முதலீடு | | |
| திறைசேரி | 616,515,611 | |
| வெளிநாட்டு உதவி | 701,378,183 | |

| | | |
|---|---|---|
| ii. நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை | | நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைகளின் ஒவ்வொரு செயற்பாட்டினதும் பெறுமதி |
| திறைசேரி | 44,259,006 | திறைசேரி |
| வெளிநாட்டு உதவி | 279,593,255 | வெளிநாட்டு உதவி |

**2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

---

பின்வரும் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நி.பி. 110 | நிறுவனத்தின் நிகழும் நட்டங்கள், இழப்புக்கள் தொடர்பில் தனியான பதிவேடொன்று பேணப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டில் 02 வாகனங்களிற்கு ஏற்பட்டிருந்த விபத்துக்கள் தொடர்பில் நட்டங்கள், இழப்புக்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி. 371(2) | கருமம் முடிவுற்ற உடன், பெறப்பட்ட முற்பணங்கள் நிலையத்திற்கு தீர்க்கப்பட வேண்டிய போதிலும் நிலையத்தினால் பேணிவரப்பட்ட பதிவேட்டின் படி 22 சந்தர்ப்பங்களில் ரூபா 598,732 தொகையான முற்பணங்கள் 01 மாதம் தொடக்கம் 11 மாதங்கள் வரையான கால தாமதத்துடன் தீர்க்கப்பட்டிருந்ததுடன. |
| (iii) நி.பி. 371(5) | முற்பணமாக வழங்கப்பட்ட சகல தொகைகளையும் நிதியாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியன்று தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் நடப்பாண்டின் இறுதியில் அவ்வாறு தீர்க்கப்படாதிருந்த முற்பண மீதி ரூபா 3,063,376 ஆக காணப்பட்டது. |

| | |
|---|---|
| (iv) நி.பி. 395(ஆ) மற்றும் (இ) | ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் தயாரிக்கப்படும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்ந்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு பரிசோதனைக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிலையத்தினால் 2011 ஆம் ஆண்டிற்குரிய வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ருக்கவில்லை. |
| (v) நி.பி. 1646 | ஒவ்வொரு மாதத்திற்குமான வாகனங்களின் நாளாந்த ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த செயலாற்றல் பொழிப்புக்கள் என்பன தொடர்ந்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தும் நிலையத்திற்குச் சொந்தமான 29 வாகனங்களில் 03 வாகனங்களிற்குரிய ஓட்டக் குறிப்புக்கள் மாத்திரமே கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. |
| (v) நி.பி. 1647(ஆ) | நிலையத்திற்குச் சொந்தமான 29 வாகனங்கள் தொடர்பில் அவற்றின் உபகரணங்கள் மீதான முழுமையான மெய்மையாய்வொன்று ஆண்டுதோரும் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக மெய்மையாய்வு நடத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | ஒவ்வொரு 06 மாதங்களிற்கு ஒரு தடவையும் நிறுவனத்திற்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரிசோதிக்கப்பட வேண்டிய போதிலும் நிலையத்திற்குச் சொந்தமான 29 வாகனங்கள் தொடர்பில் எரிபொருள் நுகர்வானது மீளாய்வாண்டில் ஒரு முறையேனும் பரிசோதிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டில் நிலையத்தின் செயற்பாட்டிலிருந்தான விளைவுகள் ரூபா 12,999,883 பற்றாக்குறையானதுடன் இதனையொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 52,450,498 ஆகும். அதன் படி மீளாய்வாண்டில் ரூபா 39,450,615 வளர்ச்சி காட்டப்பட்டது. வருமானம் ரூபா 65 மில்லியானல் அதிகரித்தமையே நிதிவிளைவுகளின் வளர்ச்சிக்கு பிரதான காரணமாகும்.

## 04. செயற்பாட்டு மீளாய்வு

---

### 4.1. செயலாற்றல்

---

#### (அ) அனர்த்தங்களைக் குறைத்தல் செயற்திட்டம்

---

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் அனர்த்தங்களை குறைக்கும் நோக்கில் அனர்த்தங்கள் நிகழும் மாவட்டங்களை இனங்கண்டு கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்கான செலவினங்களைச் செய்வதற்காக மீளாய்வாண்டின் மதிப்பீட்டு ஏற்பாடு பின்வருமாறு ரூபா 190 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 146.4 மில்லியன் திறைசேரியிடமிருந்து கிடைத்திருந்தது. மீளாய்வாண்டில் செய்யப்பட்ட மொத்தச் செலவினம் ரூபா 148.3 மில்லியன் ஆக காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டில் எஞ்சியிருந்த தொகையும் இவ்வாண்டின் செலவினத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

| செயற்திட்டம் | ஏற்பாடு (ரூபா மில்லியன்) | கிடைத்த தொகை (ரூபா மில்லியன்) | செலவினம் (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|
| i. 47 செயற்திட்டங்களிற்காக | 120 | 110 | 111.9 |
| ii. அம்பாறை, புத்தளம், மட்டக்களப்பு மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களிற்காக | 30 | 30 | 30 |
| iii. தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி அமைப்பின் | | | |
| (அ) நிலச்சரிவுகளை குறைத்தல் செயற்திட்டத்திற்காக (கண்டி, மாத்தளை, பதுளை மற்றும் நுவரெலியா) | 30 | - | - |
| (ஆ) நிலச்சரிவுகள் தொடர்பான விசேட ஆய்விற்காக | 10 | 6.74 | 6.4 |
| | 190 | 146.74 | 148.3 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் 04 செயற்திட்டங்களிற்காக ரூபா 12,340,985 ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அச்செயற்திட்டங்களிற்காக ரூபா 5,839,000 வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அச்செயற்திட்டங்கள் ஆண்டில் செயற்படுத்தப்படாமையால் அத்தொகை மீண்டும் நிலையத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மாத்தறை மாவட்டத்தில் பீக்வெல்ல நிலச்சரிவினைக் குறைத்தல் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 5,350,000 ஏற்பாட்டிலிருந்து ரூபா 1,500,000 தொகை ஆண்டில் வழங்கப்பட்டிருந்ததுடன் அச்செயற்திட்டத்தினை செயற்படுத்தாது ஏனைய செயற்திட்டமொன்றிற்காக அந்நிதி பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) தம்புள்ள பிரதேச செயலகப் பிரிவில் வெள்ளப்பெருக்கினை கட்டுப்படுத்தவதற்கான மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 95,909,005 ஆக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 3,500,000 மொத்தத் தொகையும் மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்தது. அச்செலவினத்தினை நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைகளின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக அச்செயற்திட்டம் முடிவடைந்ததாகக் கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(அ) ஆபத்தான நிலமைகள் தொடர்பான கட்டமைப்பினை தயாரித்தல் செயற்திட்டம்**

நிலச்சரிவு, வெள்ளப்பெருக்கு, சூறாவளி, கடலரிப்பு மற்றும் வரட்சி போன்ற அடிப்படை அனர்த்தங்களிற்கான ஆபத்தான நிலமைகள் தொடர்பான கட்டமைப்பினை தயாரிப்பதற்காக பின்வரும் நிறுவனங்களிற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி மற்றும் தொழில்நுட்பப் பங்களிப்புகள் நிலையத்தினால் வழங்கப்பட்டிருந்தன.

| கருமங்கள் | நிறுவனம் | நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளின் பெறுமதி | முன்னேற்றம் |
|---|---|---|---|
| | | (ரூபா | |
| i. நிலச்சரிவு அனர்த்தத் தினை வரைபடமாக்கல் | தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி அமைப்பு | 1,565,275 | காலி மற்றும் நுவரெலியாவில் 23 வரைபடங்கள் முடிவுற்றிருந்தன. |

| | | | |
|---|---|---|---|
| ii. வெள்ள அனர்த்தத்தினை வரைபடமாக்கல் | நீர்ப்பாசனத் திணைக்களம் | | நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை |
| iii. சூறாவளி அனர்த்தத்தினை வரைபடமாக்கல் | வளிமண்டலவியல் திணைக்களம் | 481,400 | நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை |
| iv. கடலோர அனர்த்தத்தினை வரைபடமாக்கல் | கரையோர பாதுகாப்புத் திணைக்களம் | 635,220 | நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை |
| v. வரட்சி அனர்த்தத்தினை வரைபடமாக்கல் | விவசாயத் திணைக்களம் | 4,177,854 | ஆண்டில் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. |

### இ. முன்னேற்பாடுகளை திட்டமிடல்

----------------------------------------------------------------

அனர்த்த முகாமைத்துவ நிலையம் அனத்தங்களை எதிர்கொள்ளும் திட்டத்தினைத் தயாரிப்பதற்காக அரசாங்க நிறுவனங்களிற்கு உதவும் பொருட்டு மீளாய்வாண்டிற்காக ரூபா 5 மில்லியன் ஏற்பாட்டினை ஒதுக்கியிருந்தது. முன்னேற்பாட்டுத் திட்டங்களைத் தயாரிப்பதற்கும் பயிற்சி செயலமர்வுகளை நடத்துவதற்கும் திறைசேரியிடமிருந்து நிலையத்திற்கு ரூபா 3 மில்லியன் கிடைத்திருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 3,170,354 தொகை முற்பணமாக செலவிடப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்பட்டன.

i. மீளாய்வாண்டில் அச்சிடப்பட வேண்டிய தேசிய கொள்கை நூல் பிரதிகளின் எண்ணிக்கை திட்டமிடப்படாதிருந்ததுடன் அதற்காக ரூபா 100,000 ஒதுக்கப்பட்டிருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டில் எவ்வித தேசிய கொள்கை நூல்களும் அச்சிடப்பட்டிருக்கவில்லை.

ii. முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகிய மூன்று மாவட்டங்களில் மாவட்ட அடிப்படை திட்டமிடல் செயலமர்வுகளை நடத்துவதற்கு ரூபா 100,000 தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் வவுனியா மாவட்டத்தில் மாத்திரம் அடிப்படை செயலமர்வு நடாத்தப்பட்டு

அதற்காக ரூபா 30,350 செலவிடப்பட்டிருந்தது. முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய 02 மாவட்டங்களில் செயலமர்வுகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

iii. மீளாய்வாண்டின் இறுதியளவில் 16 மாவட்டங்களில் முன்னேற்பாட்டு திட்டங்கள் முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன் 09 மாவட்டங்களில் இறுதித் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியிருந்தது.

ஈ. அவசர செயற்பாட்டு நிலையம்

---

இச்செயற்பாட்டு நிலையம் 2006 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டிருந்ததுடன் வாரத்தின் 07 நாட்களில் 24 மணித்தியாலங்களும் செயற்பாட்டிலுள்ளது. அவசர செயற்பாட்டு நிலையத்தினால் ஏற்படச் சாத்தியமான இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் முன்கூட்டியே அபாய அறிவிப்புத் தகவல்களை குறித்த தொழில்நுட்ப நிறுவனங்களிடமிருந்து பெற்று அத்தகவல்களை மதிப்பாய்விற்குட்படுத்தி அவற்றை தொடர்புடைய தரப்பினர்களிற்கு வழங்கி அந்த அனர்த்த நிலமைகள் தொடர்பில் தொடர்ச்சியான கண்காணித்தல் செய்யப்படுகிறது. இந்த அவசர செயற்பாட்டு நிலையத்திற்காக அனர்த்த முகாமைத்துவ தொடர்பாடல் மற்றும் எதிர்கொள்ளல் இயலளவு முன்னேற்ற செயற்திட்ட கடன் உதவியின் கீழ் பின்வரும் உபகரணங்கள் கிடைத்திருந்தன.

| | உபகரணங்கள் | பெறுமதி |
|---|---|---|
| | | ரூபா |
| i. | சுனாமி சமிக்ஞை கோபுரங்கள் | 263,698,519 |
| ii. | அவசர சிகிச்சை செயற்பாட்டு அறை | 96,022,782 |
| iii | கணனிச் செயற்பாட்டு அறை | |

அவசர செயற்பாட்டு நிலையத்தின் கீழ் உள்ள அவசர சிகிச்சை அறை (Call Management Centre) இனை தயாரிக்கும் நடவடிக்கைகள் முடிவுற்றிருந்த போதிலும் அதற்காக உத்தியோகத்தர்களை இணைப்புச்செய்தல் கணக்காய்வுத் திகதிவரை இடம்பெற்றிருக்கவில்லை.

4.2 **முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலுவலகங்களை நடாத்தல்

---

நாட்டில் இடம்பெறக்கூடிய அவசர அனர்த்தங்களை எதிர்கொள்வதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கீழ் 25 மாவட்டங்களில் அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலுவலகங்கள் பேணப்பட்டிருந்தன.

மாவட்ட நிலையத்தினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய மாதாந்த செயலாற்றல்கள் முறைப்படி சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அது தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ நிறுவனம் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) 2005 ஆம் ஆண்டு முதல் பண்டாரநாயக்க மாநாட்டு மண்டப வளவில் அனர்த்த முகாமைத்துவ நிலையம் பேணப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 1,407,600 தொகை அந்நிறுவனத்தில் வைப்புச்செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2011 ஜனவரி மாதத்திலிருந்து வேறோர் கட்டிடத்திற்கு நிலையம் இடமாற்றம் செய்யப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை அந்த வைப்புப் பணத்தினை மீளப்பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 02 நீர் பவுசர்களை கொள்வனவு செய்தல்

---

அனர்த்த எதிர்கொள்ளலை கட்டியெழுப்பவதற்காக 2011 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 28,507,482 பெறுமதியான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டதாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்த போதிலும் அதில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 9,820,000 பெறுமதியான 02 நீர் பவுசர்கள் அந்த ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

4.3 **பதவியணி நிர்வாகம்**

---

அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு நிரந்தர அடிப்படையில் உத்தியோகத்தர்களை சேர்த்துக் கொள்வதற்காக 2011 மே 20 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. பின்வரும் பதவிகளிற்காக

கணக்காய்வுத் திகதி வரை உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்படாமையால் அப்பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன.

| பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பணிப்பாளர் (செயற்பாடுகள்) | 01 |
| பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் இழப்புக்களைக் குறைத்தல்) | 01 |
| பணிப்பாளர் (மனித வளம் மற்றும் நிதி) | 01 |
| தனிப்பட்ட உதவியாளர் | 01 |
| தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் | 03 |
| வானொலி செய்தி செயற்பாட்டாளர் | 01 |
| புகைப்பட மற்றும் விடியோ படப்பிடிப்பாளர் | 01 |

### 4.4 வாகனப் பயன்பாடு

அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் 27 மாவட்ட அலுவலகங்களின் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளிற்காக 27 டபல்கெப்களும் 02 வேன்களும் அனர்த்த முகாமைத்துவ தொடர்பாடல் மற்றும் எதிர்கொள்ளல் இயலுமையினை அதிகரித்தல் செயற்திட்டத்தின் (ICET) கீழ் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்தன.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

i. மீளாய்வாண்டில் 29 வாகனங்களினதும் மொத்தப் பெறுமதி ரூபா 238,528,107 ஆக காணப்பட்டதுடன் நிலையத்தின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் அந்த வாகனங்கள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் இந்த வாகனங்களின் உரித்தினை நிலையத்திற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. மேற்படி செயற்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் கடன் உதவியாக ரூபா 19.5 மில்லியன் பெறுமதிகொண்ட டொயோட்டா லேன்ட் குரூசர் ஜீப் ஒன்று 2010 ஆம் ஆண்டில் நிலையத்திற்கு கிடைத்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2012 யூன் 15 ஆந் திகதி வரை நிலையத்தின் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இருப்பினும்,

நிலையத்தின் நிலையான சொத்துக்களின் கீழ் அவ்வாகனம் உள்ளடக்கப்பட்டிருந்தது.

4.5 **இனங்காணப்பட்ட இழப்புக்கள்**

2008 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரையான 04 ஆண்டு காலத்தில் இருப்புக்கள் தொலைந்தமைக்கான இழப்பிற்காக ரூபா 206,011 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அவ்விழப்பினை பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு அல்லது முறைப்படி கணக்குப் புத்தகங்களிலிருந்து பதிவழிப்புச் செய்வதற்கு நிலையம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

05. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது நிலையத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) முன்னேற்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்தல்

(ஆ) நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள்

(இ) வாகனங்களின் பயன்பாடு

(ஈ) அனர்த்தங்களை குறைத்தல் செயற்திட்டம்

ஒப்பம் எச். ஏ. எஸ். சமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

கணக்காய்வாளர் தலைமையதிபதி
கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களம்
306/72, பொல்நுவ வீதி.
பத்தரமுள்ள

<u>அனர்த்த முகாமைதத்துவ நிலையத்துக்காக 2011 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடையும் நிதிக்கூற்றின் மீதான 1971 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2) (இ) பிரிவின் படியான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை</u>

இது மேற்கூறிய விடயங்கள் தொடர்பாக 2012 ஒக்டோபர் 17ஆம் திகதியிடப்பட்ட கடிதம் சம்பந்தப்பட்டது. மேற்கூறிய விடயம் தொடர்பான தெளிவுபடுத்தல்கள் பின்வருமாறு

1.4 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தாபனமும் செயற்பாடுகளும்

(அ) தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டம் தற்போது வரையப்பட்டுள்ளது. இவ்வருட இறுதிக்கு முன்பதாக இத்திட்டத்துடன் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளையும் நிறைவாக்குவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்ப்பட்டன என்பதை அன்புடன் தெரிவித:துக் கொள்ள விரும்புகிறேன். தற்போது இறுதிக்கட்ட நடவடிக்கைகளிலுள்ள தேசிய அவசரகால அனர்த்த தொழிற்பாட்டுத் திட்டம், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் உதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. அனர்த்த முகாமைத்துவ கூட்டிணைப்புத் திட்டத்தின் 23 அரச நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளதால் இச்சசெயற்பாடுகளக்கு போதுமான கால அவகாசம் தேவை. எனவே, இச்செயற்பாடுகளை விரைவாக முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறியத் தருகின்றேன்.

(ஆ) பொறுப்புக்களை ஏற்பதன் மூலம் அவசர நிலைமைகளின் போது தொழிற்படும் நியம தொழிற்பாட்டு நடைமுறை, அனர்த்த முகாமைத்துவ திட்டத்தின் ஒத்திசைவுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே இதில் அவசர அனர்த்த சூழ்நிலையின் போது யார் எந்த வித்தில் எவ்வாறு செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென்பது தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, எவ்வித அவசர நிலைமையிலும் பொறுப்பு வகிப்பதன் மூலமாக தொழிப்படுவதற்கான தகைமைகள், செயற்பாடுகளை கூட்டிணைத்தல் போன்ற விடயங்கள் அத்திட்டத்தினுடாக தாபிக்கப்பட்டுள்ளமையை அன்புடன் அறியத் தருகின்றேன்.

(இ) இனங்காணப்பட்டுள்ள நிறுவனங்களுக்கான அனர்த்த முகாமைத்துவ திட்டத்தை இந்நிறுவனங்களின் மக்கள் மட்டத்திலுள்ள பிரிவினர்களின் கூட்டிணைப்புடன் தயாரிப்பதற்கான வழிகாட்டல்களை அனர்த்த முகாமைத்துவ நிலையம் வழங்கியுள்ளது. எனவே, பாடசாலைகள், வைத்தியசாலைகள், பிரதான

ஹோட்டல்கள், சமய நிறுவனங்கள் போன்றவற்றுக்கு அவசரகல தொழிற்பாட்டுத் திட்டத்தை தயாரிப்பதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதை கணிவுடன் தெரிவிக்கின்றேன்.

(ஈ) அனர்த்த முகாமைத்துவ திட்டத்துடன் தொடர்புடைய பயிற்றி நெறிகள். விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், வேலைத் தளங்கள் மற்றும் பிற ஆலோசனை செயற்திட்டங்கள் பிற நிறுவனங்களில் நடத்தப்பட்டுள்ளன. எனினும், இந்நிகழ்ச்சிகளுக்கான நிதியுதவி ஏற்பாடுகள் தற்போது சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது. எனவே இந்நிகழ்ச்சிகளுக்கான நிதியுதவிகள், வழிகாட் டல்களை தேவையான தருணத்தில் வழங்குவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

அனர்த்த முகாமைத்துவ திட்டத்தை தயாரித்தல், நிதி உதவிகளை வழங்குத் போன்ற நடவடிக்கைகள் மாவட்ட செயலகங்களிலும், பிரதேச செயலகங் களிலும் மேற்கொள்ளப்படும் என்பதை கருத்திற்கொள்ளவும்.

(உ) அவசரகால தொழிற்பாட்டுக் குழுவொன்றை நியமிப்பதன் ஊடாகவும், பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல்களின் மூலமாக தேவையான ஆலோசனைகளும் கூட்டிணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகள் வினைத்திறனான கூட்டிணைப்புக்கு ஒவ்வொரு மாதமும் இதனோடு ஒத்திசைவான தேசிய அனர்த்த முகாமைத்துவ இணைப்புக் குழு கூட்டங்கள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் நடத்தப்பட்டன.

மேலும், மாவட்டச் செயலாளரின் தலைமையில் மாவட்ட மட்டத்திலான அனர்த்த முகாமைத்துவ குழு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளதையும், இந்த நடவடிக்கைகள் அத்தகைய மாவட்ட மட்டத்திலான குழுக்களினூடாகவும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதையும் கணிவுடன் தெரிவிக்கின்றேன்.

(ஊ) அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஆராய்ச்சிக்கு அபிவிருத்திப் பிரிவு அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான தகவல்களை தினமும் வழங்குகிறது. 30 வருடங்களுக்கும் சேகரிப்பட்ட அவ்வகையான தகவல்கள் 'திரின்வென்டா' என்ற தரவுத் திரட்டாக தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே, மக்கள் அத்தரவுகளை நிறுவனத்தின் வலைத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதை அறியத் தருகின்றேன்.

(எ) ஆண்டறிக்கைகள், கூட்டிணைத்திட்டங்கள், செயற்பாட்டுத் திட்டங்கள் உட்பட சம்பந்தப்பட்ட அனைத்து அறிக்கைகளும் இடைக்கால முகாமைத்துவ குழுவுக்கும் ஏனைய தொடர்புடைய தரப்பினர்களுக்கும் பொருத்தமான முறையில் குறித்த நேரத்தில் அனுப்பப்பட்டுள்ளதோடு எதிர்காலத்திலும் இம்முறையை செயற்படுத்துவதற்கான நடைமுறைகள் மேற்கொள்ளப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

2.2.1 <u>கணக்கீட்டு வழுக்கள்</u>

(அ) (1) ஏற்றுக்கொள்ளப்பட்டது

2008, 2009 ஆம் ஆண்டுக்கான பெறுமாத்தேய்வு கணக்கிடப்பட்டிருக்க தொகுதிக் கடன் தீர்ப்பு மட்டுமே கணக்கிடப்பட்டுள்ளன. 2012 ஆம் ஆண்டில் தற்கான திருத்தங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

(ii) ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2008, 2009ஆம் ஆண்டுகளுக்கான தொகுதிக்கடன் தீர்ப்பு கணக்கிடப்பட்டுள்ள அதேவேளை சம்பந்தப்பட்ட கடன் முதலீட்டுக்கான தொகுதிக்கடன் தீர்ப்புக்கள் அவ்விரு வருடங்களுக்கும் கணிக்கப்பட்டிருக்கவில்லை. 2012 ஆம் ஆண்டில் இதற்கான திருத்தங்களை மேற்கொள்ளவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன.

(iii) ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நடைமுறைப்படுத்துவதற்கான ஏதுக்களை ஆராய்ந்த பின்னர் சம்பந்தப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கமையச் செயற்படத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

(iv) தேவையான அனைத்து திருத்தங்களும் 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

2.2.2 <u>கணக்காய்வுச் சான்றுகள் இன்மை</u>

சம்பந்தப்பட்ட தகவல்களை வழங்குவதற்கான வாய்ப்புகளை பற்றி ஆராய்ந்த பின் கூடிய விரைவில் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

2.2.3 விதிகள். ஒழுங்குவிதிகள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இனங்காமை

(அ) நிதிக் கோட்பாடுகள்

i. FR 110

FR 110 படியான நட்டம் தொடர்பான பிரத்தியேக அறிக்கையொன்று 2011ஆம் ஆண்டு பேணப்பட்டிருக்கவில்லை. எனவே, 2012 ஆண்டுக்கான இவ் வறிக்கையை பேணம் பொறுப்பு முகாமைத்துவ அதிகாரி திரு. எஸ். என். ஹேவகேக்கு பொறுப்பளிக்கப்பட்டது.

ii. FR 371 (2)

ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தொடர்புடைய நிதிக் கோட்பாடுகளின் மீது அதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கவும், இவ்வகையான நிகழ்வுகளை எதிர்காலத்தில் தடுக்கவும் பொருத்த மான நடைமுறைகள் மேற்கொள்ளப்படும்.

iii. FR 371 (5)

ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சம்பந்தப்பட்ட நிதிக் கோட்பாடுகள் தொடர்பாக அதிகாரிகளை அறிவுறுத்தவும், இவ்வகையான நிகழ்வுகளை எதிர்காலத்தில் தடுக்கவம் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

iv. FR 371 (ஆ), (இ)

2012 ஆம் ஆண்டிலிருந்து சம்பந்தப்பட்ட நிதிக் கோட்பாடுகளுக்கமைய செயற்பட பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

v. FR 396

2012/03/02 ஆம் திகதியிடப்பட்ட N/B/DMC/V13/2011 என்ற கடிதம் மூலம் நீங்கள் வினவிய விடயத்துக்கு 2012/03/15 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் தெளிவுபடுத்தல் வழங்கப்பட்டது.

vi. FR 1646

2011 ஆம் ஆண்டு இற்பற்றாக்குறை இருந்திருப்பினும் அனைத்து வாகனங்களி னதும் தினசரி பயண அட்டவணை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அனுப்புவதற்னா நாளாந்த செயற்பாடுகள் 2012ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்படுகின்றன.

vii. FR 1647

ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சம்பந்தப்பட்ட நிதிக் கோட்பாடுகள் தொடர்பாக அதிகாரிகளை அறிவுறுத்தவும் இவ்வகையான நிகழ்வுகளை எதிர்காலத்தில் தடுக்கவும் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(அ) அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்குரிய அனைத்து வாகனங்களில் எரிபொருள் சமநிலை ஆய்வுகளை மேற்கொள்வதற்காக 2012/10/23 ஆம் திகதி வழங்கப்பட்ட அறிவிப்புக்கமைய 2012 ஒக்டோபரில் சம்பந்தப்பட்ட ஆய்வை நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**03. நிதி மீள்நோக்கு**

**3.1 நிதிப் பெறுபேறு**

ஏற்றுக்கொள்ளப்பட்டது.

முன்னைய ஆண்டுகளுக்கான தொகுதிக்கடன் தீர்ப்ப ரூபா. 32,282,959 மீள்நோக்கு ஆண்டுக்கான நிதி பெறுபேறு வளரச்சியாக காட்டப்பட்டுள்ள ரூப 39,450,614 இல் சேர்க்கப்பட்டுள்ளது. இத்தொகை ஏனைய வருமானத் துடன் சேர்க்கப்பட்டுள்ளது.

**04. தொழிற்பாட்டு மீள்நோக்கு**

4.4 **முன்னேற்ற மீள்நோக்கு**

(அ) அனர்த்த அச்சுறுத்தல் குறைப்புத் திட்டங்கள்

2009 ஆம் ஆண்டு அம்பாறை, புத்தளம். மட்டக்களப்பு, பொலன்நறுவை ஆகிய மாவட்டங்களில் ஆரம்பித்துவைக்கப்பட்ட வெள்ள தணித்தல் திட்டத்துக்கு கடந்த

வருடம் (2010) ரூபா 2.0 மில்லியன் தொகை வழங்கப்பட்டது. இதில் செலவிடப் படாத தொகை 2011 ஆம் ஆண்டுக்கான செலவினத்தில் காட்டப்பட்டுள்ளது. இது தொடர்ந்து நடத்தப்படும் திட்டமென்பதால் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகிறேன்.

(அ) துல்லியமானத் தொகை நிதி ஏற்பாடுகள் இன்மையால் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்படாதிருக்க அனர்த்த தணித்தல் தொடர்பான உத்தேசிக் கப்பட்டுள்ள திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இத்தொகையை நிலையம் பெற்றுக் கொண்டது.

(ஆ) துல்லியமானத் தொகை திக்வெல்லவில் மண்சரிவு தணித்தல் திட்டத்தை நடைமுறைப்படுத்த வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஒப்புதல் வழங்கிய பின்னர் இத்தொகை திக்வெல்லவில் மழைநீர் முகாமைத்துவத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

(இ) தம்பள்ள பிரதேச செயலகத்தில் வெள்ள தணிப்புத் திட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த ஏற்பாடுகள் போதுமானதாக இன்மையால் 2012 ஆம் ஆண்டுக்கான ஏற்பாடுகளை ஒதுக்க தீர்மானிக்கப்பட்டது. தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டு திட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் வரை எவ்வாறான வெள்ள நிலைமை களையும் தவிர்க்க அத்திட்டத்தின் முதற்கட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முழு திட்டத்துக் குமான அங்கீகாரம் பெறப்படாத இத்திட்டத்தின் சில பகுதிகள் தனியாக குறிப்பிடப்பட்டுள்ளதோடு இப்பந்திகள் 2011 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது.

ஆ. இடர் தரவுக் குறிப்புத் திட்டம்

இடர் தரவுக் குறிப்புத்திட்டம் தொடர்பாக அவதானிப்புகள் துல்லியமானவை.

இ. அனர்த்தத்தை எதிர்நோக்க தயார்படுதல்

i. கடந்த வருட இறுதியில், அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய கொள்கையை மீள்திருத்தல் செய்யுமாறு அமைச்சரவை அமைச்சர்கள் கூறுனர். எனவே, 2011ஆம் ஆண்டுக்கான வருடாந்த பணித்திட்டத்தில் அதற்கான ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும், 2011 ஆம் ஆண்டு அக்கொள்கையை அச்சிடும் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை.

ii. முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிடையே கிளிநொச்சி மாவட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ நிகழ்ச்சிகளை தமது திட்டங்களி னூடாக மேற்கொள்ள ‘ஒக்ஸ்பேம்’ என்ற அரச சார்பற்ற நிறுவனம் ஏற்பாடுகளை ஒதுக்கியுள்ளது. எனவே, கூறப்பட்ட நிதி ஒதுக்கங்களை பயன்படுத்தி கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஆரம்ப வேலைத் தளத்தை மேற்கொள்ளுமாறு மாவட்ட உதவிப் பணிப்பாளருக்குத் தெரிவிக்கப்பட்டது. எனவே, கூறப்பட்ட வேலைத்தளங்களுக்கு அனர்த்த

முகாமைத்துவத்தின் கீழ் நிதி ஒதுக்கப்படாது, பிற ஒதுக்கங்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டது. முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகுக்கான மாவட்ட உதவி பணிப்பாளர் ஒருவரை அனர்த்த முகாமைத்துவ நிலையம் நியமிக்காமையினால் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளில் ஏற்பட்ட சிக்கல்களினால் முல்லைத்தீவு மாவட்ட வேலைத்தளம் மேற்கொள்ளப்படவில்லை.

iii. இற்றைவரை 16 மாவட்டங்களில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவத் திட்டங்கள் பூர்த்தயடைந்துள்ளன. மேலும், அரச சார்பற்ற நிறுவனமொன்றின் உதவியுடன் மொனராகலை மாவட்டத்தின் அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தின் சில பிரதிகள் அச்சிடப்பட்டுள்ளதோடு இன்னொரு தொகுதி பிரதிகளை அச்சிட்டு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு விநியோகிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவெ, இந்நடவடிக்கைகளை விரைவுபடுத்த நடைமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

2012 ஆம் ஆண்டில் சில திருத்தங்களுக்கு உட்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்துக்கான அனர்த்த முகாமைத்துவத் திட்டம், தயாரிக்கப்பட்டு JAICA நிகழ்ச்சியின் உதவியுடன் அச்சிடப்பட்டுள்ளது. எனவே இந்நடவடிக்கைகளை விரைவு படுத்துவதற்கான நடைமுறைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களுக் கான அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தின் இறுதி வரைவு அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதோடு, திருத்தங்களின் பின்னர் இதனை அச்சிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

கிளிநொச்சி, மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்க ளுக்கான அனர்த்த முகாமைத்துவத் திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. தற்போது வரை, இதில் 75% நடவடிக்கைகளி அறிக்கையிடப் பட்டுள்ளதை உங்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

iv. அனர்த்த முகாமைத்துவ திட்டங்கள் விஞ்ஞான முறைப்படி மேற்கொள்ளப்படுவதால் பெருந்தொகையான தகவல்களைத் தேடவும் திரட்டவும் போதியளவு காலம் தேவைப்படுகின்றது. மேலும், ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளத் திட்டங்கள், சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பப் பட்டுள்ளதோடு, அந்நிறுவனங்கள், தமது நிறுவனத்தில் நியம தொழிற்பாட்டுத் திட்டத்தை பொறுப்புடனும் வகைபொறுப்புடனும் தயாரித்துள்ளது. இத்திட்டம் வினைவிறனுடன் தற்போது மேற்கொள்ளப்பட்டது வருகின்றது.

இ. அவசரகால தொழிற்பாட்டு நிலையம்

ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இற்றைவரை அவசரகால தொலைத்தொடர்பு பரிவர்த்தனை செயற்படாமையினால் பின்வரும் விடயங்கள் பாதிக்கப்பட்டன. அவசரகால அழைப்பு நிலையம் புனரமைக்கப்பட்டு 2012/04/02 ஆம் திகதி வித்யா மாவத்தையிலுள்ள புதிய நிலையத்தில் தாபிக்கப்பட்டது. அவசரகால தொழிற்பாட்டு நிலையத்தின் 24x7 நடவடிக்கைகள், அப்போது அனுமதியளிக்கப்பட்டிருந்து 09 அதிகாரிகளைக் கொண்டு மேற்கொள்ளப்பட முடியாதிருந்தமையினால் முகாமைத்துவச் சேவைகள் அமைச்சுக்கு 2012/06/15 ஆம் திகதிய DMC/02/03/09 (1) கடிதத்தின் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டு, 2012/08/28 நிலவிய DMC/E4/55/4/243 கடிதத்தின் மூலம் 21 ஊழியர்களுக்கான அனுமதி வழங்கப்பட்டது. மேலும் இவ்வனுமதிக் கப்பட்ட பணியாட்தொகுதியை நியமிக்க ஏற்கனவே, நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு நிறைவடைந்துள்ளன. இவ்வாரம்ப திட்டத்தின் படி அவசரகால தொழிற்பாட்டு நிலையத்தில் 25 ஊழியர்களுக்கான இடவசதி ஏற்படுத்தப் பட்டுள்ளது. தற்போது அவசரகால தொழிற்பாட்டு நிலையத்துக்கான தரவுகளை இற்றைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஒரு இந்திய கம்பனி பொறுப் பேற்றுள்ளது. மேலும், அனைத்து தொலைபேசிச் சுட்டிகளும் இலங்கை வரை படங்களும் அதனுள் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதால் இந்நடவடிக்ஜை கைகளுக்கு அதிக காலம் தேவைப்படும் என்பதை குறிப்பிட்டுள்ளனர்.

உடனடிகாக இந்நடவடிக்கையை மேற்கொள்ள பொருத்தமான ஊழியர் ஒருவரை நியமித்து, பயிற்சி வழங்க செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஈ. அனர்த்த முகாமைத்துவ தொலைத்தொடர்புகள் மற்றும் இயலுமை அபிவிருத்தித்திட்டம் (ஐஊநுவு திட்டம்)

2012/07/05 ஆம் திகதி நடைபெற்ற பொது தொழில்முயற்சிக் குழு (COPE) கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் படி 2011 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்று திருத்தப்பட்டது. எனவே, இவ்விசாரணையின் குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 33,356,103 வித்தியாசம் 2012/08/20 ஆம் திகதி அனுப்பப்பட்ட திருத்திய நிதிக்கூற்றின் திருத்தப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது.

4.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

அ) i. 25 நிர்வாக மாவட்டங்களில், 17 மாவட்டங்களின் சிவில் சேவை – அதிகாரிகள் உதவிப் பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளதோடு, இராணுவம் மற்றும் வான் படையின் அதிகாரிகள், கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, புத்தளம், அனுராதபுரம் ஆகிய 7 மாவட்டங்களில் உதவிப் பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் மாவட்ட அலகின் முன்னாள் உதவிப் பணிப்பாளரினால் உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப் பட்டதினால் உதவிப் பணிப்பாளர் (மாவட்டம்) பதவி வெற்றிடமாயிருந்தது. எனினும், தற்போது இப்பதவி நிரப்பப்பட்டுள்ளது.

ii. மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகின் உதவிப் பணிப்பாளர்களுக்கு மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் முன்னேற்ற அறிக்கைத் தொடர்பாக எழுத்து மூல மற்றும் வாய்மூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. எனவே, 2012 ஒக்டோபர் வரையான 95% ஆன முன்னேற்ற அறிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்பதை அறியத் தருகின்றேன்.

ஆ) 2012/10/02 ஆம் திகதி BMICH இனடைய பணிப்பாளர் நாயகத்துக்கு, வைப்புத் தொகையை விடுவிக்குமாறு கடிதம் மூலம் கேட்கப்பட்டது. அதன்படி, 2011 ஆம் ஆண்டுக்கான ஜனவரி முழுமாதத்துக்கான மற்றும் பெப்ரவரி அரை மாதத்துக்குமான ரூபா. 1,281,807.07 அலுவலக வளாகத்துக்கான வாடகையை கழித்தபின் ரூபா. 127,792.98 செலுத்தப்படுமென தெரிவிக்கப்பட்டது. எனினும், BMICH இற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை வழுவொன்றின் காரணமாக பதியப்பட்டிருக்கவில்லை. வைப்புத்தொகை ரூபா. 1,407,600.00 மட்டுமே பதியப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டில் இதற்கான திருத்தங்களை மேற் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அறியத்தருகின்றேன்.

இ) 2012 ஆம ஆண்டில் DIMO இனால் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு சம்பந்தப்பட்ட பவுசர்கள் வழங்கப்பட்டன. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசின் படி தரங்குறைவின் காரணமாக அத்தகைய பவுசர்கள் நிராகரிக்கப் பட்டன. எனவே, 2012 ஆம் ஆண்டின் தர பவுசர்கள் இரண்டு நிறுவனத்துக்கு வழங்கப்பட்டன.

**4.3 ஊழியர் நிர்வாகம்**

வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு விண்ணப்பதாரிகளை நியமிப்பதற்கு, விண்ணப்பங்களை கோர பல பத்திரிகை விளம்பரங்கள் பிரசுக்கப்பட்டு நேர்முகத் தேர்வுகள் நடைபெற்றன. எனினும் குறித்த சில பதவிகளுக்கான அடிப்படை தகைமை தொடர்பான விடயங்கள் எழுப்பப்பட்டதுடன், அடிப்படை தகைமை யுடைய விண்ணப்பதாரிகள் ஏற்கனவேயுள்ள சம்பளம் மற்றும் நலன்களுக்கு தமது அதிருப்தியை தெரிவித்துள்ளதுடன் கூடிய சம்பளத்தை கோரியுள்ளனர். எனவே, சில பதவிகள் இன்னும் நிரப்பப்படாதுள்ளது.

**4.4 வாகனப் பிரயோகம்**

i. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பயன்பாட்டுக்காக வழங்கப்பட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் என்ற பெயரில் பதியப்பட்டுள்ள வாகனங்களை இடமாற்ற MTA 6 மற்றும் MTA 8 என்பவற்றின் முழுமையான அமைப்புடன் கூடிய 2014/04/20 ஆம் திகதிய DMC/03/03/26 இலக்கக் கடிதம் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டது. அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்ட 2012/04/09 ஆம் திகதிய

MDM/AD/08 இலக்க பதில் கடிதம் உங்கள் கவனத்துக்காக இணைப்பு I உடன் இணைக்கப்பட்டுள்ளது.

ii. இவ்வாகனம் வெளிநாட்டு உதவியாக எமது நிறுவனத்துக்கு வழங்கப்பட்டதுடன் நிலையான சொத்து ஆவணத்திலும் பதியப்பட்டு SLAS – 24 இன்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், இவ்வாகனம் 2010/11/14ஆம் திகதி பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியின் பேரில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளது.

4.5 **இனங்காணப்பட்டுள்ள குறைபாடுகள்**

ஏற்றுக்கொள்ளப்பட்து.

குறித்த சில நட்டத்துக்கு அவ்வதிகாரியிடமிருந்து தொகையைப் பெற்றுக்கொள்ள சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, தற்போது அத்தனகல்ல மாவட்ட நீதிமன்றத்தில் அந்நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

**05. முறைமைகளும் நிர்வாகமும் :**

(அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) தொடர்பான விடயங்களுக்கு கூடுதல் கவனஞ் செலுத்துவதற்கான நடவடிக்கைகள் கூடிய விரைவில் மேற்கொள்ளப்படுமென அன்புடன் அறியத் தருகின்றோம்.

மேஜர். ஜென். காமினி ஹெட்டியாராச்சி (Rtd).
பணிப்பாளர் நாயகம்